

# ரமணோதயம்

ஜூலை 2012
காலாண்டு

அருணை விஜய இதழ்
விலை ₹ 20

# ஓர் அன்பு வேண்டுகோள்

ரமணோதயம் வாசக அன்பர்களே!

ரமணோதயம் கடந்த பத்து ஆண்டுகளாக பொருளாதார தளர்வுகளுக்கிடையிலும் தனது சேவையில் எவ்வித சோர்வுமின்றி ரமண அன்பர்களுக்குச் சேவை செய்வதையே இலட்சியமாகக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருவது சொல்லித் தெரிவதில்லை. தனது பதினோறாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த நல்வேளையில் இதன் நிர்வாகம் ரமண அன்பர்கள் முன் வைக்க வேண்டிய அன்பு வேண்டுகோள் ஒன்றுள்ளது. இதுகாறும் இதனைப் பேணி வளர்த்த பெருமையனைத்தும் ரமணோதய வாசகர்களையே சாரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இனியும் ரமணோதயம் தொடர்ந்து பொருளாதாரத் தளர்வின்றி தனது பணியைத் தொடர வேண்டுமெனில் அதற்கான வைப்பு நிதி மிகவும் வலுவான நிலையில் வைக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. தொடர்ந்து எவ்விதப் பொருளாதாரத் தடங்கலுமில்லாமல் இதன் பணி தொடர குறைந்தபட்சம் ரூபாய் பத்து இலட்சம் வைப்பு நிதி உருவாக்கப் பட வேண்டும். இதற்கு பகவானைப் பிரார்த்திப்பதுடன் உங்களைத்தான் இப்பொருளுதவியை அளிக்க வேண்டும் என வேண்டுகிறோம். இந்த வைப்புத் தொகையின் கணக்கில் பொருளுதவி செய்ய தாங்கள் ஆயிரம் மற்றும் அதன் மடங்குகளாக பணமாகவோ அல்லது காசோலையாகவோ “Ramanodhayam” என்னும் கணக்கிற்கு செலுத்த வேண்டுகிறோம். இத்தொகை அளிப்போருக்கு S80G பிரிவின் கீழ் வருமான வரி விலக்கு உண்டு.

என்றும் பகவான் பணியில்,
ரமண கேந்திரா டிரஸ்ட்
சென்னை

உதயம் 11 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 4

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அருணை விஜய இதழ்

ஜூலை 2012

**ஆசிரியர்:** Dr. S. ராம் மோஹன்

**இணை ஆசிரியர்:** தியாகராஜன்

**ஆலோசகர்கள்:**

ஏ.வி. சுப்ரமணியன், ஜா. ஜயராமன், சந்திரமெளலி

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

**ஆண்டுச் சந்தா:** ரூ. 75 **தனி பிரதி:** ரூ. 20

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர் சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்பு அணுகவும்:

குமார் ராஜா: 9444261296

மின்னஞ்சல்: arunamramanam@gmail.com

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:

குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்

41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமணகேந்திரா டிரஸ்ட், சென்னை 4

தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அருணை விஜய இதழ், ஜூலை 2012


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | **ஆசிரியர் உரை** | | 3 |
| 2 | **மோன சன்னதியின் மகிமை** | வி. நிரஞ்சன் | 17 |
| 3 | **இனிவரும் திருநாட்கள்** | | 27 |
| 4 | **ரிபுகீதை** | தியாகராஜன் | 28 |
| 5 | **சுவர்மறை சோலை** | ஜா. ஜயராமன் | 33 |
| 6 | **பிராணார்ப்பணம்** | பாமதி மைந்தன் | 37 |
| 7 | **பகவானின் ''ஆன்ம வித்தையை விளக்கும் 'ஆழ் துயிலின்' அரிய தத்துவங்கள்''** | | 45 |
| 8 | **நான் யார் தெரியுமாவிலிருந்து நான் யார் வரை** | Dr.ஏ.வி.ராஜகோபாலன் | 55 |
| 9 | **ஈன்றிட்ட அன்னைக்கும் பெரிதருள் புரிந்தோய்** | ஆகுரா | 61 |
| 10 | **நூல் அறிமுகம்** | நிகரில்லா நிவேதிதா | 73 |
| 11 | **ரமணத்தழகு** | கருணா (எ) நமச்சிவாயம் | 76 |
| 12 | **செய்திகள்** | | 77 |
| 13 | **ரமணோதயம் காப்பு நிதி தொடரும் நன்கொடையாளர்கள்** | | 79 |

# ஆசிரியர் உரை

## உடம்பை வளர்த்தேன்!
## உயிர் வளர்த்தேனே!

*தத்துவ ஞானி ஜே.கிருஷ்ணமூர்த்தியிடம் ஒரு அன்பர் வினவினார்: நீங்கள் ஒரு உயர்ந்த ஞானி, எனினும் சாதாரணமானவர் போல் உடலை யோகம், உடற்பயிற்சி முதலியவற்றால் பாதுகாக்கின்றீர்களே? அழியும் உடலுடன் உங்களை, நீங்கள் சம்பந்தப் படுத்திக் கொள்கிறீர்களா? என்று வினவினார். அதற்கு ஜே.கே. "இந்த உடல் நானல்ல என்பது எனக்குத் தெரியும்; ஆயினும் எப்படி ஒரு குதிரையின் சொந்தக்காரன் குதிரையைக் கவனமாகப் பார்த்துக் கொள்கிறானோ, அது போன்றே நான் எனது உடலை, நான் அது அல்ல என்று அறிந்த போதிலும், அது ஒழுங்காகச் செயல்படுவதற்காக பராமரிக்கிறேன்" என்று விடை பகர்ந்தார். நாம் உடல் மீது பற்று வைக்காவிடினும், நமது ஆத்ம சாதனைக்கு உதவுவதற்காக அதைப் பராமரிக்க வேண்டும். இந்த உண்மையை அறிந்த ரிஷிகள் உடல் நலம், மன நலம் பேண யோகம், தியானம் போன்றவற்றை வகுத்துத் தந்திருக்கின்றனர்.*

***ஊன் அடைந்த உடம்பின் பிறவியே***
***தான் அடைந்த உறுதியைச் சாருமால்***
***தேன் அடைந்த மலர்ப் பொழில் தில்லையுள்***
***மாநடம் செய் வரதர் பொற்றாள் தொழ!***

என்று பெரியபுராணத்தின் இரண்டாவது பாடலிலேயே கூறுகிறார்.

இந்த உடம்பை ஏன் பாதுகாக்க வேண்டும்? ஆத்ம சாதனை செய்வதற்கு ஆரோக்கியமான மனமும், உடலும் சாமான்ய மனிதனுக்குத் தேவை. ஏன் ஆத்ம சாதனை செய்ய வேண்டும்? மீண்டும் இந்த உடம்பு வராமல் இருப்பதற்குத்தான். எந்தச் செயல் செய்யினும், அந்தச் செயலுக்குரிய கருவிகளைப் பாதுகாத்து, செய்யும் செயலை சிறப்புடன் செய்து, செயலில் வெற்றி பெற்ற பின்னர், கருவியைப் பற்றிக் கவலைப் படாமல் இருப்பதுதான் அறிவு. ஓர் ஏணியில் ஏறி உப்பரிகைக்குச் செல்லும் போது, ஏணியைப் பத்திரமாகச் சுவரில் சார்த்தி, மெதுவாக ஒவ்வொரு படியிலும் கால் வைத்து, அதிக அழுத்தத்தினால் படி முறியாமல் பார்த்து ஏறி, பின்னர் உப்பரிகையை அடைந்த பின்னர், ஏணியையும் கூட எடுத்துச் செல்வதில்லை. மேலே சென்றவுடன் ஏணியை மறந்து விடுகிறான். கரும்பிலிருந்து சாறு எடுத்தவுடன் சக்கையை விட்டுவிடுவது போல, ஆத்ம சாதனையில் வெற்றி கண்டவுடன் உடம்பைப் பற்றிய நினைப்பே போய்விடும். முள்ளை முள்ளால் எடுப்பது போல், உடல்-மனம் இவை இரண்டையும் அவற்றாலேயே போக்க வேண்டும்.

**உடம்பைப் பெற்ற பயன் ஆவதெல்லாம்**
**உடம்பினுள் உத்தமனைக் காண்!**

என்கிறார் ஔவை. மனிதப் பிறவி பெறுவதற்கரியது. அதனைப் பெற்ற பயன் பகவான் திருவடியைச் சார்ந்து, அதனை ஒழிப்பதே. அதனைச் செய்யாவிடில் மனிதப் பிறவியைப் பெற்றதால் பயன் ஏதும் இல்லை.

**பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும் - நின் சிற்றடியை**
**குறுகிப் பணிந்து பெறக் கற்றிலேன்!.**

என்கிறார் அருணகிரியார்.

பகவானே இதற்கு வழிகாட்டுகிறார். மனிதப் பிறவியைப் பெற்றும் அதனை, ஆத்மாவை அறியப் பயன்படுத்தாதவர்

வாழ்க்கை வீணே! விலங்கினங்கள், பறவைகள் போன்றவை கூட பகவான் திருமுன்னர் வந்தபின் அவை முக்தி அடைந்ததாக அருள் வரலாறு கூறுகிறது.

ஒரு பேராசிரியர் அல்லது வசதி படைத்தவன், மகன் சரியாகப் படிக்காவிட்டால், அவனுடைய தந்தை அடே முட்டாள்! நல்ல சூழ்நிலை இல்லாத நமது கார் டிரைவரின் மகன் நூறு சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றுள்ளான், நீ இப்படி இருக்கிறாயே? எனக் கூறுவார். அது போன்றே பெறுவதற்கு அரிய மனிதப் பிறவி எடுத்தும் கூட ஆத்ம ஞானம் அடைய முயற்சி செய்யாதவர்க்கு, நீ இழிந்தது எனக் கருதும் நாய், காகம் போன்றவை கூட என்னிடம் சரணடைந்து முக்தி அடைந்துள்ளனவே, நீ ஏன் முயலாமலேயே இருக்கிறாய்? என்று எடுத்துக் காட்டுவதாகவே பகவானின் வாழ்க்கை உபதேசம் அமைந்துள்ளது. பசு லக்ஷ்மி பகவானின் திருக்கரத்தால் தனது வாழ்வின் இறுதித் தருணத்தில் முக்தி பெற்றதை

**பசுவாம் லட்சுமி விமுக்தி நாளாம்!**

என பகவான் அறுதி இட்டுக் கூறுகிறார்.

உமாபதி சிவாச்சாரியர், ஆசாரம் எதுவும் பயிலாது, இறைவனிடம் பெரும் பக்தி கொண்டு இருந்த சாம்பன் எனும் திருக்குலத்தான் ஒருவனுக்கு மட்டுமின்றி, இறைவனின் அபிஷேக ஜலம் வரும் வழியில் முளைத்திருந்து, அந்தத் தீர்த்தத்தில் தினம் நனைந்திருந்த முட்செடிக்கும் முக்தி அருளிய வரலாற்றை முன்பு கண்டிருக்கிறோம். திருச்சி அருகிலுள்ள திருஎறும்பூர் என்ற தலத்தில் ஒரு சிற்றெறும்பு இறைவனை எண்ணிச் சரணடைந்ததால் முக்தி பெற்றது.

திருவானைக்காவல் தலத்தின் வரலாறு மிக அரிய ஒன்றாகும். அங்கே ஒரு நாவல் மரத்தின் அடியே தோன்றிய சிவலிங்கத்தை, ஒரு யானையும், சிலந்தியும் வழிபட்டன. பெருமான் வெயிலில் காய்கிறானே! என்று எண்ணிய சிலந்தி, சிவபிரான் வெயிலில் காயாமல் இருக்க, அவர்



மேலே வலை பின்னியது. யானையோ தனது துதிக்கையினால் ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து அபிஷேகம் செய்தது. இதில் நாம் காணும் சிறப்பு என்னவெனில், யானை, சிலந்தி இரண்டுமே தமது ஸ்வபாவத்திற்கு எது தக்கதோ அதன் படியே வழிபாடு செய்தன. பிறர் செய்வதைக் கண்டு தனது இயல்பை மாற்றிக் கொள்ளவில்லை. பகவானின் உபதேசமும் அதுவே. உன் இயல்பிற்கு எது தக்கதோ, அதன்படியே உனது சாதனையைத் தொடர்வாய். ஒன்றும் செய்யாமல் வீணே காலம் கழிப்பதைக் காட்டிலும் அல்லது பிறர் செய்வதைத் தானும் செய்ய முற்பட்டுக் குழம்புவதைக் காட்டிலும் உனது ஸ்வபாவத்திற்கு ஏற்றபடி சாதனை செய்வது சாலச் சிறந்தது என்று கூறுகிறார். எனவேதான், யாரேனும் வந்து, ரூபத்தியானம் செய்யலாமா? என்று கேட்டால், ஆஹா! செய்யலாமே என்பார். மற்ற ஒருவர் அரூபத் தியானம் செய்யலாமா? என்றால், அதையே தொடர்வாயாக என்பார். ரூபத் தியானம் செய்வதைக் காட்டிலும் அரூபத் தியானம் செய்வது சிறந்ததாமே? என்று வினவினால், உனக்கு பொருத்தமான ஒன்றை விடாமல் பின்பற்றுவதை விட்டு வீண் ஆராய்ச்சியில் காலத்தை வீணாக்காதே! என்பார். பகவான் அடிக்கடி காட்டும் நம்மாழ்வார் திருவாய்மொழியும் இதையே உபதேசிக்கிறது.

**அவரவர் தமதமது அறிவறி வகைவகை**
**அவரவர் இறையவர் எனஅடி அடைவர்கள்**

*திருஞானசம்பந்தப் பெருமானும், வெற்று ஆராய்ச்சியில் ஈடுபடுவதைக் கண்டிக்கிறார்.*

**ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும்**
**மிக்குச் சோதிக்க வேண்டா!**
**சுடர் விட்டுளன் எங்கள்சோதி**

*அனாவசிய ஆராய்ச்சியை விட்டு உனது இதயத்தே சுடர்விட்டு ஒளிரும் ஆத்மாவைத் தேடி, ஒளிரும் இறைவனை உனக்கு ஏற்ற வழியில் தியானிப்பாய் என்கிறார் பாலனாவாயர்.*

*பகவானிடம் ஒருவர், ஸ்ரீ ராமகிருஷ்ணர், விவேகானந்தருக்கு தனது ஸ்பரிசம் மூலம் சாட்சாத்காரம் அளித்தாரே; அது போன்று, நீங்கள் ஏன் எனக்கு அருளக் கூடாது? என்று கேட்டதற்கு, கேட்பது விவேகானந்தரோ? என்று பதில் கேள்வி கேட்டார். உயர்ந்த ஆன்மிக நிலையில் இருந்த நரேந்திரனுக்கே அது சாத்யம். நீ உனக்கு ஏற்ற வழியில் ஆத்ம சாதனையில் தொடர்ந்து பாடுபடு என்பதே இது சுட்டிக் காட்டும் பொருள்.*

*மீண்டும் திருவானைக்காவலுக்கு வருவோம். சிலந்தி சிவபிரான் மீது வலைகட்டியிருப்பதைக் கண்ட யானை, இது அபிஷேகத்திற்குத் தடையாக உள்ளதே என்று அதைக் குலைத்து விட்டது. பின்னர் வந்து பார்த்த சிலந்தி, பெருமான் வெயிலில் காய்கிறானே என்று மீண்டும் வலை பின்னியது. மறுநாள் வந்து பார்த்த யானை மீண்டும் அதைக் கலைத்து விட்டது. இங்ஙனம் பல நாட்கள் சிலந்தி வலை பின்னுவதும், யானை அதைக் கலைப்பதுவுமாகக் கடந்து வந்தது.*

*ஒரு நாள் யார் இப்படி இறைவனின் மீது தான் பின்னிய நிழலைக் குலைக்கிறான் என்று பார்க்கச் சிலந்தி காத்திருந்தது. யானை தனது வலையைக் கலைத்ததைப்*

பார்த்தவுடன் அதன் துதிக்கையில் புகுந்து குடைய ஆரம்பித்தது. வலி தாங்காமல் யானை தனது துதிக்கையைத் தரையில் ஓங்கி அடித்தபடியே இறந்தது. சிலந்தியும் இறந்தது. யானை சிவ கணங்களில் ஒன்றாக ஆனது. சிலந்தி சோழன் கோச்செங்கண்ணனாக பிறவி எடுத்து பல்வேறு சிவாலயங்களை கட்டியது.

**சிலந்தியும் ஆனைக் காவில் திரு நிழல்பந்தர் செய்து**
**உலந்தவன் இறந்தபோதே கோச் செங்கணானுமாகக்**
**கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்**
**குலந்தனில் பிறப்பித்திட்டார் குறுங்கை வீரட்டனாரே!**

என்று அப்பர் சுவாமிகள் பாடுகிறார்.

திருக்காளத்தியிலும் இதே போன்ற புராணம் உண்டு. யானை மட்டுமா? திருக்கரபுரம் என்ற தலத்தில் ஒரு கழுதை கூட வழிபட்டு முக்தி அடைந்ததாக வரலாறு உண்டு. இங்ஙனம், பசு, குரங்கு, மான், பாம்பு, வண்டு போன்ற பல ஜீவராசிகளும் வழிபட்டு முக்தி அடைந்த தலங்கள் பல உள்ளன.

மற்ற உயிரினங்களே இங்ஙனம் உய்வு அடையும் போது, பெறுதற்கரிய மானுடப்பிறவி பெற்ற நாம் மட்டும் தயங்குவதேன்? மனிதனுக்கு மற்றது பற்றிய அறிவு இருக்கிறதோ இல்லையோ, ஒன்று மாத்திரம் அறிந்திருப்பது உறுதி. வருங்காலத்தில் துன்பம் அடையாமல் சேர்த்து வைக்க வேண்டும் என்ற குறிக்கோளே அது. அலுவலக வேலையில் இருக்கும் நாம் பல்லாண்டு கழித்து ஒய்வு பெறும் போது கிடைக்கும் படி பணத்திற்காக Provident Fund சேமிப்பில் பணம் போட்டு வைக்கிறோம். அடுத்த மாதத்திற்காக இம்மாதம் சேமிப்பவன் அறிவாளி. அடுத்த ஆண்டுக்காக இந்த ஆண்டே திட்டமிட்டு சேமிப்பவன் மிக்க அறிவாளி. வருங்காலத்தே இன்பம் தரத்தக்க செயல்களைச் செய்து வசதி உள்ள போதே செல்வத்தச் சேமிப்பவனை புத்திசாலி எனப் பாராட்டுகிறோம். மனிதனுக்கு இயற்கையாக உள்ள

குணம் இது. அது போல நமது மனமும் உடலும் நல்ல நிலையில் இருக்கும்போதே இப்பிறவிக்கு அப்பாற்பட்ட ஸாஸ்வத நிலையை அடையத் தேவையான அருட் செல்வத்தைச் சம்பாதித்துக் கொள்ளும் எண்ணம் வேண்டும். இளமையில் அனுபவிக்கலாம். பின்னர் முதுமையில் ஞான சாதனம் பயிலலாம் என்பது தவறான எண்ணம். வயதானால் ஞானம் வராது, முடக்கு வாதமும் நீரிழிவும் தான் வரும். எனவே இன்றே இங்கே இப்பொழுதே அந்த பரம்பொருளைப் பெறுவதற்கான சாதனம் பயில வேண்டும். அதுவே உயர்ந்த அறிவு. அதற்கு உடலும், மனமும் ஆரோக்யமாக இருப்பது தேவை.

ஆரோக்யமான மனம் எது? எந்த மனம் உலகப் பொருள்களை நாடுவதை விட்டு, இறைவனை நாடுகிறதோ அதுவே ஆரோக்யமான மனம். நான் தியானம் செய்யும் போது, மனம் எங்கேயோ அலை பாய்கிறதே, ஏதேதோ எண்ணங்கள் வந்து தொல்லை படுத்துகின்றனவே என்று தோன்றுகின்றதல்லவா? ஒரு நரியின் உடம்பில் பல பூச்சிகள் பிடித்து விட்டனவாம். அறிவு மிக்க அந்த நரி, ஒரு குச்சியை வாயில் கவ்விக் கொண்டு மெல்லக் குளத்தில் இறங்கியது. கால் அளவு போனவுடன் பூச்சிகள் உடம்பின் மேல் ஏற ஆரம்பித்தன. மேலும் மூழ்கி கழுத்தளவு தண்ணீரில் வந்தவுடன் பூச்சிகள் கழுத்தின் மேலும், தலையின் மேலும் உட்கார்ந்து கொண்டன. பின்பு தலையைத் தண்ணீரில் மூழ்க வைத்தது நரி. அப்போது உடம்பில் இருந்த பூச்சிகள் அனைத்தும் வெளியே நீட்டிக் கொண்டிருந்த குச்சியினைப் பற்றிக் கொண்டன. கடைசியில் நரி குச்சியைத் தண்ணீரில் விட்டுவிட்டு கரைக்கு வந்து விட்டதாம். மாயை ஆகிய பூச்சி நம்மைப் பற்றிக் கொண்டிருக்க, மாயையின் குட்டியாகிய மனம் எண்ணங்களின் வலி தாங்காமல் எங்கெங்கோ அலைந்து கொண்டிருக்கின்றது. பகவானின் மீது வைத்த பக்தியாகிய குச்சியைப் பற்றிக் கொண்டு தியானத்தில் மூழ்கினால்

எண்ணங்கள் ஆகிய பூச்சிகள் போய் விடுகின்றன. தியானம் பயிலப் பயில நாம் ஒருமைப் படுத்திய திருஉருவமும் மறைந்து பின் மனமே இல்லாதது ஆகிவிடுகிறது. இதனையே பகவான் பிணம் சுடும் தடி என்கிறார். சுடுகாட்டில் பிணத்தை எரித்து, நெருப்பு கொழுந்து விட்டு எரிய வேண்டி, ஒரு விறகினால் அதைத் தூண்டி, பின்னர் நெருப்பு கொழுந்து விட்டு எரிந்தவுடன் அந்த விறகையும் அந்த எரியும் நெருப்பில் இட, அதுவும் எரிந்து சாம்பலாகிறது. அது போன்றே மனத்தையே பயன்படுத்தி, தியானம் செய்து மனத்தை அழிக்க வேண்டும். இத்தகைய மனோநாசமே ஆத்மசாட்சாத்காரத்தின் வாயில்.

நமது வாழ்க்கைப் பயணத்தில் நம்முடன் வருவது எவர்? நாம் நம்முடைய உடலோடு வாழும் காலத்தில் இவ்வுடல் நீங்கி சூட்சம சரீரத்தில் உள்ள போதும், மீண்டும் பிறவி எடுக்கும் காலத்திலும், நம்முடன் தொடர்ந்து வருவது இரண்டு. பற்றித் தொடரும் இருவினை, புண்ணிய பாவங்களே! என்று பட்டினத்தார், இந்த இரண்டையும் அடையாளமாகக் காட்டுகிறார். உண்மையில் இவை இரண்டும் நமக்குத் துணை அல்ல. இவை இரண்டையும் அகற்றினால் நமது வாழ்க்கை யாத்திரை முடிவடைந்து விடும். பின்னர் இறைவன் அருள் பொழியும். ஆனால் இப்போது ஞான சாதனையில் நாம் பரிபாகம் அடையவில்லை. வினைகளை போக்கிக் கொள்ளமுடியாது மேலும், மேலும் வினைகளைப் பெருக்கிக் கொண்டே போகிறோம். இப்படியே போய்க் கொண்டு இருந்தால், நம் வினை எப்போது முடியும்? இந்த யாத்திரை முடிந்து நாம் வெற்றி பெற நமக்குப் பாவ, புண்ணியமான துணைகள் கூட இருத்தல் கூடாது. ஏனெனில், அவையும் நமக்கு உண்மையான சத்ருக்கள்.

நமக்குச் சத்ருவாக உள்ள இரு வினைகளும் எப்படி எழுகின்றன? இவை நமது மூன்று கரணங்களாகிய மனம், வாக்கு, உடல் இவற்றால் செயல்படுகின்றன. இதற்கு முடிவு கட்ட மனம்-வாக்கு-உடல் அனைத்தையும் கடந்த

இறைவனே, நமது சத்குருவாக வந்துள்ளான். பல்வேறு விஷய வஸ்துக்கள், கண்டு, கண்டு அவற்றை அடைய ஆசைப்பட வைப்பவை. நமது கண்கள் நாம் மீண்டும் வினைச் சூழலில் சிக்காமல் இருக்க வேண்டுமானால், அந்தக் கண்கள் அவனது கண்களையே நோக்க வேண்டும்,சத்விஷயங்களையே நாட அவனது மெல்லிய பாதங்கள் வழி காட்ட வேண்டும்; அதே போன்று, விஷய வஸ்துக்கள் பற்றியே பேசிக் கொண்டிருக்கும் நமது வாக்கினால் கருமம் செய்யாதிருக்கும் படி அவனது திருநாமமே துணை நிற்க வேண்டும். அதுவே ஆத்மார்த்தமான உண்மைக்குத் துணை நிற்கும். நமது பிராரப்த வினையைப் போக்க அவனது திருஉருவமும் துணை செய்யும். எல்லாவற்றிக்கும் சிகரமாக உலகம் அனைத்தும் அஞ்சும் மரணபயத்தை நீக்கி அருள்வது அவன் திருவடிகளே.

**விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்பாதங்கள்**
**மெய்ம்மை குன்றா**
**மொழிக்குத் துணை முருகா என்னும் நாமங்கள்!**
**முன்பு செய்த**
**பழிக்குத் துணை அவன் பன்னிரு தோளும்! பயந்த தனி**
**வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே!**

என்பது கந்தரலங்காரக் கூற்று.

பகவான் நம் உள்ளத்தே சிற்றடி பதித்து பாடுகிறார்.

**பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும் நின் சிற்றடியைக்**
**குறுகிப் பணிந்து பெறக் கற்றிலேன்.**

என்று அருணகிரியார் பாடுவதைக் கண்டோமல்லவா? ஏன் சிற்றடிகள் வைத்து பகவான் வருகிறார்? அவர் திருவடி மலர்கள் போற்றப்படுவது அவரது ஸ்வரூபமே. அகண்டாகார ஸ்வரூபம் என்ற உண்மை கூறினால் நமக்கு அச்சம்தான் உண்டாகும்.

ஒருமுறை குஞ்சுசுவாமி கூறினார்: "பகவான் தன்னுடைய பூர்ண மஹத்துடன் நம் முன்னர் வந்தால்

நாம் அனைவரும் பயந்து விடுவோம் என்றுதான் இங்ஙனம் தன்னைச் சிறு வடிவாக்கி ஒரு கோவணாண்டியாக நம் முன் வந்துள்ளது.” அவரது பெரும் கருணையால் நாம் அணுகக்கூடிய சிற்றடியுடன் வருகிறார். ஏனென்றால், நமது தற்போதைய நிலையில் இறைவனது முழு மஹத்தையும் வைத்துக் கொள்ளும் விரிவு நம்மனதில் இல்லை. ஒரு பெரும் பணக்காரன் ஓர் ஏழை அடியவன் வீட்டிற்கு வரும் போது தனது பெரும் பரிவாரத்துடனும், பெட்டிகளுடனும் வரமாட்டான். தனது அடியாளின் மேல் கொண்ட பேரன்பினால், தனியாளாக வந்து அந்த ஏழையின் சிறு வீட்டில் அமர்கிறான் அல்லவா? அதுபோன்றே பகவானின் சிற்றடியும் நம் உள்ளத்தில் படுகிறது. வாகீச கலாநிதி கூறும் அழகிய உவமை இது. பெறுதற்கரிய மனிதப் பிறவியைப் பெற்ற பின் பகவான் நம் உள்ளத்தில் பெரும் கருணை கொண்டுபதித்த சிற்றடியை நம் அகங்காரத்தை விட்டுக் குறுகிப் பணிந்து பயன் பெற வேண்டும்.

**சாடும் சமரத் தனிவேல் முருகன் சரணத்தில்**
**ஓடும் கருத்தை இருத்த வல்லார்க்கு யுகம் போய் சகம் போய்விடும்**

என்கிறார் அடியார்.

யுகம் என்பது காலத்தின் முடிவு. சகம் என்பது பிரபஞ்சத்தின் எல்லை. பிரபஞ்ச உணர்வும், கால உணர்வும் பகவான் திருவடிகளை மனத்தில் பதித்து, மனதை சமாதியில் ஆழ்த்துவோர்க்கு வராது. கால உணர்வையும், சக உணர்வையும் கடக்கும் போது நான் யார்? என்ற விசாரம் முடிகிறது.

இது தொடர்பான ஒரு கதையைக் காண்போமா? கங்கை நதிக் கரையில் ஒரு முனிவர் குடிசை போட்டு காட்டில் கிடைக்கும் காய், கனிகளை உண்டு வாழ்ந்திருந்தார். அந்த நாட்டின் அரசன் ஒரு நாள் வேட்டையாடக் காட்டிற்கு வந்தான். வேட்டை

*ஆரம்பத்தில் தனது படையை விட்டுப் பிரிந்து நீண்ட தூரம் வந்துவிட்டான். அரசனுக்கு மிக்க பசி, தாகம். தூரத்தில் முனிவரின் குடிலுக்குச் சென்று உணவு ஏதேனும் கிடைக்குமா, என்று பார்க்கலாம் என்று அங்கே சென்றான்.*

*கதவைத் திறந்த ரிஷி, மகனே! நீ யார்? என்று கனிவுடன் வினவினார். அரசன் நான் இந்த நாட்டின் அரசன்! என்றான். முனிவர் நீ யார்? என்று கேட்டேனே தவிர, நீ வகிக்கும் பதவி என்ன? என்று கேட்கவில்லை. நாளை வேறு ஓர் அரசன் உன் நாட்டைக் கைப்பற்றினால் உன் பதவி போய் விடும். எனவே, உண்மையில் நீ யார்? என்று கேட்டார்.*

*குழப்பமடைந்த அரசன் தனது பசி அதிகரிப்பதை உணர்ந்து, ஸ்வாமி இப்போது நான் மிகப் பசியுடையவனாக இருக்கிறேன், சாப்பிட ஏதேனும் தாருங்கள் என்றான். முனிவர் என் கேள்விக்கு நீ பதில் சொல்லவில்லையே, நீ முதலில் அரசனாக இருப்பதாகக் கூறினாய். இப்போதோ பசி உடையவனாக இருப்பதாகக் கூறுகிறாய், உண்மையில் நீ யார்? என்றார்.*

*இதைக் கேட்ட அரசன் முனிவர் கூறுவது சரிதான். முதலில் நான் அரசன் என்றேன். இப்போது பசியுடையவன் என்கிறேன். உண்மையில் நான் யார்? என்று யோசித்தான். பதில் எதுவும் கிடைக்கவில்லை. எனவே பசியை போக்கிக் கொண்டு பின்னர் யோசிக்கலாம் என்று எண்ணி, முனிவரிடம் ஸ்வாமி நான் முதலில் சாப்பிட்டு விட்டு, பிறகு யோசித்து உங்கள் கேள்விக்குப் பதில் சொல்கிறேன்! என்று கேட்டுக் கொண்டான்.*

*அதே சமயம், வழக்கமாக முனிவருக்குக் காய், கனிகளைக் கொண்டு வரும் பக்தன் அங்கே உணவுப் பொருட்களுடன் வந்தான். அரசனைச் சற்றும் கவனியாமல், முனிவரை வணங்கிய பின்னர் உணவுப் பொருட்களை அவர் முன் வைத்து விட்டுச் சென்றுவிட்டான். இதைக்*

*கண்ட அரசன் தன்னை இந்த சாதாரண விவசாயி சற்றும் பொருட்படுத்த வில்லையே, உணவும் கிடைக்கவில்லையே; குடிசையை விட்டே வெளியேறலாமா? என்று யோசித்தான். அதை உணர்ந்த முனிவர், மகனே! அந்த பக்தனுக்கு, நீ அரசன் என்று தெரியாது! அரசன் என்பது ஒரு பதவியே, அதோடு அவன் உன்னைத் தொடர்பு படுத்திப் பார்க்கவில்லை என்றால், உனக்கு மதிப்பு இல்லை. எனவே, இப்போது சொல், நீ யார்? என்றார்.*

*அரசன், முனிவரே! முதலில் எனக்கு உணவு கொடுங்கள். பசி உயிர் போகிறது, பின்னர் உங்கள் கேள்விக்குப் பதில் சொல்கிறேன் என்றான். உடனே, முனிவர் பக்தன் கொண்டு வந்த உணவை அரசன் சாப்பிடத் தட்டில் வைத்தார்.*

*அரசன் உண்ணத் தொடங்கிய சமயம், ஒரு படைவீரன் அரசனைத் தேடி அவசரமாக ஓடி வந்தான். வேற்று நாட்டு அரசன் ஒருவன் படைகள் ராஜ்ஜியத்தில் புகுந்து விட்டதாகவும், போரில் தலைமை தாங்கிப் படைகளை நடத்த அரசனை வருமாறும் வேண்டினான். அதைக் கேட்ட அரசனின் அசுரப் பசி மறைந்தது. அப்போதே படை நடத்த எழுந்தான். முனிவரோ சாப்பிட்டு விட்டு போகலாமே என்றார். அரசன் என் நாட்டைப் பகைவர்கள் சூழ்ந்திருக்கிறார்கள். நான் உள்ளம் துடிக்க அமைதி இழந்து இருக்கிறேன். உடனே நான் போர்முனைக்குச் செல்ல வேண்டும்! என்று பரபரப்புடன் சொன்னான். முனிவர் அவனிடம் அமைதியாகக் கூறினார், மகனே மீண்டும் குழப்பத்தை உண்டு பண்ணிக் கொள்கிறாயே! நீ யார்? என்று கேட்டதற்கு முதலில் நான் அரசன் என்றாய், பின்னர் பசியாக இருப்பவன் என்றாய், இப்பொழுதோ பதைபதைப்புடன் அமைதி இழந்திருக்கும் ஒருவன், என்கிறாய். உண்மையில் நீ யார்? என்றார். அரசனோ, ஸ்வாமி என்னால் இப்போது பதில் சொல்ல முடியாது, உடனே நான் போருக்குச் செல்ல வேண்டும்! என்று படபடப்புடன் கூறினான்.*

*முனிவர் விடவில்லை, குழந்தாய் நீ மிகவும் களைத்துப்போய் உள்ளாய்! முதலில் சாப்பிடு, பின்பு ஓய்வு எடுத்துக் கொள். உன் படைத்தளபதிகளை படை நடத்திச் செல்லச் சொல், பின்னர் போரில் கலந்து கொள்ளலாம்! என்றார். அரசனும் அவ்வாறே படைவீரனிடம் சொல்லி அனுப்பினான். பின்னர் முனிவரிடம் எனது பொறுப்பைத் திறமை வாய்ந்த படைத்தளபதியிடம் ஒப்படைத்துவிட்டேன். நான் இப்போது அமைதியாக உள்ளேன்! நான் சாப்பிடலாமா? என்று உணவை எடுத்து வாயருகே கொண்டு சென்றான்.*

*முனிவர் அவன் கையை கெட்டியாகப் பற்றி, நீ என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லவில்லயே? நீ ஓர் அரசன் என்பது உண்மையா அல்லது நீ பசி கொண்ட ஒருவனா? அல்லது நீ பதற்றத்துடன் இருக்கும் ஒருவனா? அல்லது இப்போது சொன்னதுபோல், பதற்றம் நீங்கி அமைதியாக இருக்கும் ஒருவனா? உண்மையில் நீ யார்? என்று கேட்டார்*

*அரசன் முனிவரைப் பணிந்து எனக்கு மிகவும் பசி சாப்பிட்டு ஓய்வு எடுத்த பின்னர் பதில் சொல்கிறேனே என்று வேண்டினான். முனிவரும் சரி என்றார். சாப்பிட்டு முடித்த அரசன், களைத்திருந்ததால் ஒரு மர நிழலில் ஆழ்ந்து, அயர்ந்து உறங்கிவிட்டான். நீண்ட நேரம் கழித்து எழுந்திருந்த அரசன், முனிவர் இன்னும் தியானத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டான். இன்னும் முனிவரின் கேள்விக்கு விடை தெரியாதலால், சொல்லாமல் கொள்ளாமல் அங்கிருந்து கிளம்பிவிட முயன்றான்.*

*உடனே முனிவர் அவனிடம் சென்று எங்கே கிளம்பி விட்டாய்? என்று வினவினார், அரசன் தடுமாற்றத்துடன், இல்லை, குதிரை சரியாக இருக்கிறதா! என்று பார்க்க வந்தேன். நான் நீண்ட நேரம் நன்றாகத் தூங்கி விட்டேன் அல்லவா? என்றான்.*

*முனிவர் குழந்தாய்! நீ ஆழ்ந்து தூங்கியதாகக் கூறுகிறாய், நீ ஆழ்ந்து தூங்கியது உனக்கு எப்படித்*

தெரியும்? என்றார். அரசன் நான் தூங்கியதே எனக்குத் தெரியவில்லை என்றான். முனிவர், நீ தூங்கியதை நீயே அறியவில்லை என்றால், தூக்கத்தில் நீ அறியாமையில் இருந்ததாகக் கூறுகிறாய். இது என்ன குழப்பம்? முதலில் உன்னிடம் நீ யார்? என்று வினவியபோது நான் அரசன் என்றாய்; பின்பு நான் பசியாக இருப்பவன், நான் பதற்றத்தில் இருப்பவன், நான் அமைதியாக இருக்கிறேன் என்றெல்லாம் கூறினாய், இப்போதோ நான் அறியாமையில் இருந்தேன் என்கிறாய்.

இப்போது நன்றாக யோசி, நீ கூறிய நான் அரசன் என்று ஆரம்பித்து, பின்பு நான் பசியாக இருக்கிறேன், நான் பதற்றத்தில் இருக்கிறேன், நான் அமைதியாக இருக்கிறேன், நான் அறியாமையில் இருக்கிறேன், என்றெல்லாம் கூறினாய். இவை அனைத்திலும் உள்ள நான் என்பது உண்மையில் யார்? என்று கேட்டார்.

இதுகாறும் வெளியே தேடிப் பார்த்த அரசன், விடை கிடைக்காததால், உள் முகம் நோக்கினான். முனிவரின் கேள்விக்கு தான் கூறிய ஒவ்வொரு பதிலும், நான் என்ற ஒன்றின் அடிப்படையாகவும், எல்லாவற்றிலும் பொதுப்படையாகவும், தனித்தும், நிலையாகவும் உள்ளது என்று உணர்ந்தான். முனிவரை சரணடைந்து ஆத்ம சாட்சாத்காரம் பெற்றான்.

**நான் ஒன்று தானத்து**
**நான், நான் என்ற ஒன்றது**
**தானாகத் தோன்றுமே உந்திபற!**

என்பது பகவான் உபதேச உந்தியாரில் உணர்த்துவது இதைத்தான்.

கருத்துப் பரிமாறலைத் தொடர்வோம்!

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்

# மோன சன்னிதியின் மகிமை

## வி. நிரஞ்சன்

### *“நிச்சலமா சித்தம் நிலை நிற்க முத்தி”*

*“1938-ஆம் ஆண்டு பகவானிடம் அழைத்துச் செல்லப்பட்டேன். அவருடய வதனம் எல்லையில்லாக் கருணையும் சாந்தமும் கூடிய ஞான சூரியனாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவரை வணங்கி நான் எழுந்த உடன் அவர் என்னை நோக்கி, ‘நீ அழைக்கப் பட்டிருக்கிறாய் என்று தோன்றுகிறது,’ என்றனர். இப்படி என்னை வாழ்த்திய பின்னர் அவர் உள்ளாழ்ந்துவிட்டார். யாரையும் நோக்காது, எதையும் பாராது இருந்த அவர் எனது உள்ளே நுழைந்து அதி ஆழமாய் ஊடுருவி எனது இதய மையத்தையே அடைந்தார். திடீரென்று அவர் என் புறம் திரும்பினார்; அவருடைய பார்வை சொல்லொணா வல்லமை கூடி இருந்தது; எனதுள்ளே சலனம் ஓய்ந்தது; ஆழ்ந்த அமைதி நிலைத்தது; பிரபஞ்சத்தில் சிருஷ்டிக்கப் பட்ட அனைத்து சீவன்களின் மீதும் பெருங்கருணை என்னுளே எழுந்தது. பகவான் சாதாரண குரு அல்லர், பிரபஞ்சத்தையே உள்ளடக்கிய சத் குரு என்று அந் நாளிலிருந்து நான் தெரிந்து கொண்டேன்.” இவ்வாறு மகா கிருஷ்ண சுவாமி பகவானின் சன்னிதியில் நிலவும் மோனத்தின் ஆற்றலால் தான் அடைந்த பேற்றினை சொல்லால் விளக்கமுடியாது என்று சொல்லிப் போற்றுகிறார்.*

*1930-களில் ஜி.ஹச்.மீஸ் என்பார் பெங்களூரிலிருந்து திருவண்ணாமலைக்கு வருகின்றார். நெதர்லேண்டைச்*



சேர்ந்த அவரை மாரிஸ் ஃப்ரீட்மன் என்னும் ஜெர்மானியர் பகவானிடம் அனுப்புகின்றார். ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் சட்டம் படிக்க நேர்ந்த அவர், சட்டத்திற்கும் நீதிக்கும் மூலமாக இருப்பது மதம் என்று உணர்ந்த காரணத்தால், பல்வேறு மதங்களின் உட்கருத்துக்களை ஆயத் துவங்கினார். இந்து மதத்தைப் பற்றியும் நிறையத்தெரிந்து கொண்டிருந்த அவர் பல சந்தேகங்களைக் கொண்டிருந்தார். ஆனால் எவ்வளவு முயன்றும் அவரால் சில ஐயங்களைத் தீர்த்துக் கொள்ள முடியவில்லை. அந் நேரத்தில் தான் ஃப்ரீட்மன் அவரை பகவான் ரமணரிடத்தே அனுப்புகின்றார்.

காலை 8-30 மணி அளவில் அவர் பகவானைக் காண்கிறார். அன்பர்கள் பலர் பகவானிடம் தங்களது கேள்விகளைக் கேட்டு அவருடைய விளக்கங்களைப் பெறுகின்றனர். மீஸ் பகவானின் சன்னிதியில் ஏறத்தாழ இரண்டரை மணி நேரம் உட்கார்ந்து இருக்கின்றார். அதன் பின்னர் அவரைக் கூட்டி வந்த, டி.கே. சுந்தரேச அய்யரின் மகன், பானு சர்மா அமைதியாய் அமந்திருந்த அவரிடம் வந்து அவரது கேள்விகளைக் கேட்டு பகவானின் பதில்களைப் பெற்றுக் கொள்ளும்படி நினைவூட்டுகின்றார்.

மீஸ் கேட்பதற்குத் தன்னிடம் கேள்விகள் ஏதும் இல்லை, ஏனெனில் பகவான் ரமணரது சன்னிதியில், அவரது கேள்விகள் பதில் அளிக்கப் பட்டுவிட்டன, அவரது சந்தேகங்கள் தீர்ந்துவிட்டன என்று பதில் சொல்கின்றார். பகவானின் மோன சன்னிதியில் தெளிவு பெற்ற அவர் பின்னாளில் சாது ஏகரசா என்னும் பெயரோடு பகவானின் அடியவர் ஆனார். இந் நிகழ்ச்சி 1937-ஆம் ஆண்டு நடந்திருக்கின்றது.

ஒரு நாள் மாலை. அன்று சிவராத்திரி. அன்னையார் கோவிலில் வழிபாடு முடிந்துவிட்டது. பகவானோடு சேர்ந்து அன்பர்கள் இரவு உணவும் எடுத்துக் கொண்டாயிற்று. பகவான் தனது இருக்கையில் அமர்ந்தவுடன் சாது ஒருவர்

அவரை வணங்கி, “இன்று சிவராத்திரி. தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தை பகவான் இவ்விரவில் விளக்கி அருள இசைந்தார் எனில் நாங்கள் புண்ணியர் ஆவோம்,” என்று பிரார்த்தித்துக் கொண்டார். “சரி. அமருங்கள்,” என்று பகவான் பகர்ந்தனர்.

சாதுவும் உட்கார்ந்துகொண்டார். அனைவரும் ஆர்வத்தோடு பகவானை நோக்கியவாறு இருந்தனர். பகவானும் அவர்களை நோக்கியவாறு அமர்ந்திருந்தார். பகவான் இயல்பாக அம்ர்ந்திருக்கும் அதே நிலையில் இருந்தனர்; ஒரு சொல் இல்லை; ஒரு அசைவு இல்லை; எங்கும் நிச்சலம். பகவானும் அசலம்; அன்பர்களும் அசலம். காலம் சென்றுகொண்டே இருந்தது. வேளா வேளைக்குக் கடிகாரம் ஒன்பது, பத்து, பதினொன்று, பன்னிரெண்டு, ஒன்று, இரண்டு, மூன்று என்று அடித்துக் கொண்டே இருந்தது. இவ்வாறு எட்டு மணி நேரம் கழிந்தது. பகவானும் அன்பர்களும் அப்படியே அசைவற்று அமர்ந்திருந்தனர். கால தேசம் கடந்த பூரண ஒடுக்க நிலை நிலவியது. மோனத்தில், பேரமைதியில், மெய்யிருப்பில், உள்ளபடி உள்ள நிலையில் காலம் கழிந்தது. இவ்வாறு மோன முத்திரையின் விளக்கத்தை மோனத்திலேயே பகவான் விளக்கி அருளியதைப் போற்றுகிறார் டி.கே. சுந்தரேச அய்யர்.

காஷ்மீரத்தைச் சேர்ந்த அன்பர் ஒருவர் தனது வேலையாள் ஒருவரோடு இங்கு வந்து சேர்ந்தார். அங்குத் தங்கி இருந்த காலத்தில் பகவான் காஷ்மீரத்தில் பேச வல்லவர் என்று தனது வேலையாள் மூலமாக அறிகிறார். அவர் பகவானிடம், “பகவானே, உங்களுக்கு எங்கள் மொழி தெரியும் என்று என்னிடம் சொல்லவில்லையே” என்று கூறி வருந்தினார். ”உங்களது மொழி எனக்குத் தெரியாத போது நான் எப்படி அது தெரியும் என்று சொல்வது?” என்று பகவான் சொல்ல அவர் ஒரு அற்புதத்தை விவரிக்கின்றார்.

*முந்தைய நாள் இரவில் அந்தக் காஷ்மீரியினுடைய வேலைக்காரர் பகவானை யாரும் இல்லாத போது சந்தித்து தனது குறைகளை எல்லாம் விளக்கிக் காஷ்மீரத்தில் பேசிக்கொண்டிருந்ததாகவும், அதன் பின்னர் பகவான் அவரிடம் காஷ்மீரத்திலேயே பதில் கொடுத்ததாகவும் அந்த வேலைக்காரர் தனது எசமானிடம் கூறியிருக்கின்றார். பகவான் அளித்த பதில்களையும் அவரிடம் விளக்கமாய்ச் சொல்லியிருக்கின்றார். அந்த வேலைக்காரருடைய சந்தேகங்களில் பெரும்பான்மையானவை அவர் தனது எசமான் பேசிய பொழுது கேட்ட ஆன்மிக சம்பந்தப்பட்டவையாய் இருந்ததால், அவ்விளக்கங்கள் தனக்கு நேரிடையாய் தரப்படாமல் காஷ்மீர மொழியிலேயே பகவான் அவரது வேலைக்காரருக்குச் சொல்லியிருக்கின்றார் என்பதே அவரது முறையீடு.*

*பகவானோ வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை. அந்த வேலைக்கரர் பகவானிடம் காஷ்மீரத்தில் பேசிய தென்னவோ உண்மையே. பகவான் அவரிடம் ஏதும் சொல்லவில்லை என்பதும் உண்மையே. ஆனால் பகவானுடைய மோன சன்னிதியில் காஷ்மீரி ஒருவர் தனது மொழியிலேயே பேசி அதன் பின்னர் பகவானிடம் தனது மொழியிலேயே பதில்களையும் பெற்றிருக்கிறார் எனில் என்னென்பது! மோனம் மொழிகளுக்கு அப்பாற்பட்டது மட்டும் இல்லை போலும்; மோனம் மொழிகளை உள்ளடக்கியதும் ஆம். (இந் நிகழ்ச்சியை மேஜர் சாட்விக் தனது நினைவுகளிலும், கிருஷ்ண பிக்ஷு என்பார் தனது "ஸ்ரீ ரமண லீலை" என்கின்ற நூலிலும் வேறு வேறு செய்திகளோடு விளக்கி இருப்பினும், நிகழ்ச்சியின் கரு பகவானுக்குத் தெரிந்திராத காஷ்மீர மொழியில் ஒருவர் பேசி பகவனின் மோனத்திலேயே அவற்றுக்கான பதில்களையும் காஷ்மீரத்திலேயே பகவான் பேசி அளிப்பது போன்றே பெற்றிருக்கிறார் என்பதே.)*

*பகவானின் மோனம் என்பது மனோ சங்கல்பத்தால் விளைவது இல்லை. மாறாக. மனோ நாசத்தின்*

விளைவாகிறது. "நான் உதியாது உள்ள நிலை, நாம் அதுவாய் உள்ள நிலை," என்று பகவான் எந்த நிலையை 'உள்ளது நாற்பதி'ல் விளக்குகின்றனரோ அது தான் உண்மையில் மோனம். "நான் உதியாது உள்ள நிலை என்பது என்ன?" இது தான் கேள்விகளில் அதி உயர்ந்த கேள்வி. இதற்குக் கிடைக்கும் அனுபவ விளக்கம் தான் கிடைத்தற்கு அரிய பேறு. பகவானுடைய உபதேசம் அனைத்தையும் உள்ளடக்கிய சாதனைக்கு வித்தாய் இருப்பது இந்தக் கேள்வி தான்.

இதையே மேலும் பின்வருமாறு பகவான் விளக்குகின்றனர். "எது உண்மை? தோன்றி மறையும் 'நான்' உண்மையா, அல்லது, அது தோன்றி மறைதற்கு இடனாய்த் தோன்றி மறையாது ஒளிரும் 'இருக்கிறேன்' என்னும் பூரண உணர்வா?" இக்கேள்விக்கு எண்ணம் கொடுக்கும் பதில் உண்மை ஆகாது. காரணம் அந்த பதிலைக் கொடுப்பதே போலியாகிய 'நான்' என்னும் எண்ணம். 'நான்' என்கின்ற எண்ணமே மனம். அதுவே விழிப்பிலும் கனவிலும் எழுச்சி உறுவதும், உறக்கத்தில் மறைவதுமாய் இருக்கின்ற ஒன்று. அந்த 'நான்' உதியாது இருக்கும் நிலை உறக்கமாய் விடுவதால், அந்த மூல நிலையை இன்னதென்று உறக்கத்தில் நம்மால் கண்டுகொள்ள முடியவில்லை.

ஆதலால் தான் பகவான் சொல்லுகின்றார்: "விழிப்பு உணர்வு அற்ற உறக்கத்தில் 'நான்' என்று எழும் எண்ணத்தின் மூலத்தானத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் போகின்றது. ஆதலால் செய்ய வேண்டியது விழித்திருக்கும் பொழுது கவனத்தைக் கூர்மையாக்கி உண்முகப்படுத்தி தேகான்மபாவ எழுச்சி எங்கே ஏற்படுகின்றது என்று ஆழ்ந்து தேடி அறிய வேண்டும். 'எழும்பும் அகந்தை எழும் இடத்தை நீரில் விழுந்த பொருள் காண வேண்டி - முழுகுதல் போல், கூர்ந்த மதியால் பேச்சு மூச்சுஅடக்கிக் கொண்டு உள்ளே ஆழ்ந்து அறிய வேண்டும் அறி.' "

"அருணாசலம் என அகமே நினைப்பவர்" என்கின்ற பதத்தில் "அருணாசலம்" யாது, அதை நினைத்தல் என்பது என்ன என்னும் பத்திமையின் உண்மையை பகவான் எவ்வண்ணம் உணர்த்துகிறார்? தோன்றி மறையாது ஒளிர்கின்ற பூரணப்பொருள் சற்றே அயனுக்கும் மாலுக்கும் ஒரு காலகட்டத்தில் தோற்றமாகிறது. தங்களுக்குள் யார் வல்லவர் என்று போராடிக் கொண்டிருக்கும் அவர்களிடையே அடி முடி காணமுடியாத அளவிற்கு பரந்து பட்ட பூரண சோதி ஒன்று தோன்றுகிறது. வெளிப்பட்ட காரணத்தால் ஆதியும் அந்தமும் தனக்கு இருப்பதுபோல் தோற்றிய அந்தச் சோதியோ வெளிப்படா நிலையில் ஆதியும் அந்தமும் அற்று சதா சுயமே விளங்கிக் கொண்டிருக்கும் பூரண அறிவொளி. வெளிப்பட்டுக் கால தேசத்திற்குக் கட்டுப்பட்ட அயனும் மாலும் எப்படி கால தேசம் கடந்த பூரணப்பொருளின் உண்மையை அறிவர்?

இது போலத்தான் தேகான்ம **பா**வம் என்னும் உணர்வு நமது இயல்பேயான பூரண உணர்விலிருந்து சட உடலோடு கூடி சுய விளக்கம் உள்ள 'நான்' போல எழுச்சியுறுகிறது. இந்த 'நான்' எழுந்தால் சகலமும் எழுகின்றது; இந்த 'நான்' அடங்கினால் சகலமும் அடங்குகிறது. விழிப்பில் அகந்தை இருக்கின்றது; உலகம் இருக்கின்றது; மெய்யான 'நான்' இருக்கின்றேன். உறக்கத்தில் அகந்தை இல்லை; உலகம் இல்லை; ஆனால் மெய்யான 'நான்' இருக்கின்றேன். தோன்றி மறைகின்றவற்றைப் பொய்யாய் நீக்கினால் சொரூபஞானம் மிஞ்சுகின்றது. அதுவே முதலும் முடிவும் ஆகிய உண்மை. கனவின் முதலும் முடிவும் விழித்திருப்பவன் ஒருவனே. விழித்திருக்கும் வரை கனவு உதியாது. கனவு காண்பவன் விழிப்புணர்வில் கரைந்து ஒடுங்குகின்ற வரை கனவும் முடியாது. உலக வாழ்க்கை என்கின்ற கனவைக் கண்டுகொண்டிருக்கும் அகந்தை உருவற்றுப் போகும் வரை அக் கனவு தோன்றற்கும் அது ஒடுங்கற்கும் இடமாக விளங்கும்

சொரூபஞானம் அனுபூதியாகாது. சொரூப ஞானமே தோன்றி மறையாது ஒளிர்கின்ற பூரண உணர்வு.

இந்தச் சொரூப ஞானத்தையே பகவான் "ஏக வானமே, இதுவே மோனமே, இன்பத் தானமே" என்று 'ஆன்ம வித்தைக் கீர்த்தனத்தி'ல் விளக்குகின்றனர். பகவானுடைய சன்னிதி ஆன்மஞான மோன சன்னிதி; எல்லாவற்றையும் உள்ளடக்கி இருப்பு அறிவு இன்பமாய்த் தானே சுயமாய் விளங்கும் பூரண வெற்று வெளி. படைப்பிற்குக் காரணமாகிய மனச் சலனம் முற்றிலும் ஓய்ந்த அந் நிலையே நம் அனைவரது இயல்பாகிய சமாதி என்கின்றனர் பகவான்.

இதை விளக்கத் தக்ஷிணாமூர்த்தி எவ்வாறு மோன நிலையினை உற்று சனகாதி முனிவர்களுக்கு உபதேசிக்க நேர்ந்தது என்று ஒரு கதையை பகவான் முருகனாருக்குச் சொன்னார். சனகாதி முனிவர்கள் பால் கருணை கொண்டு தக்ஷிணா மூர்த்தி, கேள்விகளை அவர்கள் கேட்டவண்ணம் இருக்க, அனைத்திற்கும் பதில் அளித்துக் கொண்டே இருந்தனராம். ஆனால் எழும் கேள்விகளுக்கு ஒரு எல்லை இல்லை போல் சதா கேள்விகள் எழுந்து கொண்டிருக்க குருவும் பொறுமையோடு விளக்கம் அளித்து வந்திருக்கின்றனராம். குரு ஒரு கால கட்டத்தில் சீடர்கள் மேல் பேரிரக்கம் கொண்டு சின் முத்திரையோடு கூடி மோனத்தில் ஆழ்ந்துவிடுகின்றார். சொல் கடந்த நிலையை அடைவதற்கு எவ்வளவு தான் குரு சொல் கொண்டு விளக்கினாலும் மேலும் மேலும் சொற்கள் சந்தேகங்களாய் வெளிவந்து கொண்டிக்கின்றனவே. இது சொல்லைக்கொண்டு சொல்லைக் கடப்பதற்குப் பதிலாய் சொற்களைப் பெருக்கிக்கொள்வதாகிறதே, மனதைக் கொண்டு மனதைக் கடப்பதற்குப் பதிலாய் மன வெளியின் பரப்பை மேலும் பெருக்கிக் கொள்வதாகிறதே.

இது சனகாதி முனிவர்களுக்கு ஏற்பட்ட அனுபவம் மட்டும் இல்லை. தன் உண்மையினைத் தேடுகின்ற

ஒவ்வொருவருக்கும் நேர்கின்ற கிட்டியும் எட்டாத நிலை என்கின்ற மனமாயை. கிட்டிவிட்டது என்று நினைக்க வைக்கின்ற மனம் சற்றே கழித்து அதை எட்டாத தொலைவில் கொண்டு வைத்துப் புலம்பவைக்கின்றது. அடையவேண்டிய பொருள் நாமாயிருக்க நமக்கு அன்னியமாய் ஒன்றை அடைய வேண்டும் என்று எண்ணி அது கிட்டியது போல் களித்தலும் அது எட்டாது போய்விட்டது போல் புலம்பலும் மனதால் கற்பிக்கப்படும் தடை தானே. சனகாதி முனிவரும் வேறு வழியின்றி குருவின் மோன சன்னிதியின் வயப்பட்டு மனச் சலனம் ஒய்ந்து ஞான சமாதி உற்றனர். அதுவே உண்மை ஆயிற்று.

கதை கேட்ட முருகனார், “ஐயனே! தொன்று தொட்டு வருகின்ற கதையில் தக்ஷிணா மூர்த்தி ஒரு சொல் கூடப் பேசவில்லை என்று தானே சொல்லப் படுகின்றது,” என்றனர். “நடந்தது என்னமோ இது தான்,” என்று ரமண மா முனியும் பதில் அளித்தனர். இவ்வளவு உறுதியாய் சொல்பவர் வேறு யாராய் இருக்க முடியும்?

மோனம் ஒன்றே உள்ள பொருள். மற்ற அனைத்தும் மோனத்தின் மேல் தோன்றி மறைகின்ற பொய்த் தோற்றங்களே. மோனம் ஒன்றே அறிவு, உணர்வு, ஞானம், நித்தியம், சத்தியம், இன்பம். மோனம் ஒன்றே ‘இருக்கின்றேன்’ என்று உணர்வாக, அறிவாக, இன்பமாக அனைத்து சீவர்களின் சொரூபஞானமாகவும் அதிட்டான மாகவும் கால தேசம் கடந்து விளங்கும் நின்மல நிஷ்களங்க பூரணம். காற்று அடங்கிய இடத்தில் முற்றிலும் அசைவற்று ஒளிரும் அகல் விளக்குப் போன்றது. தேகான்ம பாவம் அடங்கிய இடத்தில், வினை முதல் நான் என்கின்ற எண்ணம் ஒடுங்கிய இடத்தில், கர்த்துருத்துவம் அடங்கிய இடத்தில், ‘இருக்கின்றேன்’ என்று விளங்கும் பூரண நித்திய ஞான ஆனந்த அகவிளக்கம் ஆகிய மோனம். இதை அன்றோ பகவான் ‘ஆன்ம வித்தைக் கீர்த்தனத்’தில் “சொல் மானத தனுவின் கன்மாதி சிறிதின்றிச் சும்மா அமர்ந்திருக்க, அம்மா! அகத்தில் ஆன்ம சோதியே! இராது பீதியே!

*நிதானுபூதியே! இன்ப அம்போதியே!" என்று தெளிவாக விளக்கி அருளுகின்றனர்.*

*ஆன்ம வித்தைக்கீர்த்தனத்தின் வரிகள் இடத்திற்கு ஏற்பக் கொடுக்கப் பட்டிருப்பினும், ஒவ்வொரு வரியையும் பகவானின் மூல உபதேசமாகக் கொண்டு அகமுகமாய் உசாவத் துவங்கினாலோ, அது மேலும் மேலும் கவனத்தை உள் முகமாக்கி மோன சன்னிதியில் ஆழ்த்தி பொய்யாம் "நான்" என்னும் எண்ணத்தைக் கரைத்து, மெய்யாம் 'நான்' என்னும் இருப்பு அறிவு இன்பத்தை தெளிவாக நிலை நிறுத்தும்.*

***குழவி முன் நனவு முன்னாக் கூறுபல் அவத்தை எல்லாம்***
***சுழலினும் கலந்திருந்தே சொலிக்கும் உள் அகமா நாளும்***
***கழல் விழுவோர்க்கு ஆர் தன்னைக் காட்டுவன்***
***சிற் குறிப்பால்***
***தழல் விழிக் குருவாம் அந்தத் தக்ஷிணா மூர்த்தி போற்றி.***

*பகவானின் தமிழில் சங்கரரின் 'ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி துதி'*

*குழந்தைப் பருவம் முதல் எத்தனை பருவ மாற்றங்கள் கொண்டது வாழ்க்கை.*

*நனவு, கனவு என்று எத்தனை அவத்தைகள் கொண்டது வாழ்க்கை.*

*இவை அனைத்தும் மாறி மாறிச் சுழன்று கொண்டே இருக்க, இவற்றோடு கலந்து இவற்றை இலங்க வைத்துக் கொண்டு, ஆனால் இவற்றால் சற்றும் பாதிப்படையாது உள்ளே 'நான், நான்' என்கின்ற அக விளக்கமாய் நித்தியமும் சொலித்துக் கொண்டிருக்கின்றது மெய்ப் பொருள்.*

*சீவத்துவத்தின் உண்மையையோ, இறைவனது உண்மையையோ, முக்தியையோ யார் ஒருவர் பிற அனைத்தையும் விட்டு ஒருமுகப்பட்ட நாட்டத்தால் தன்னை அடைந்து அகந்தையைத் தனது கழல் அடிகளில் வீழ்த்தி வணங்குவரோ அவருக்கு மூல அதிட்டானமாய்*

அவருள்ளேயே விளங்கும் நித்திய ஞான சோதியையே நித்திய ஞானமும் நிச்சலமும் கூடிய மோனத்தின் குறிப்பால் தானாகக் கட்டுவான் குரு.

'இருக்கின்றேன்' என்கின்ற உணர்வே தானாகவும், தன் பார்வையாகவும், தன் மொழியாகவும் கொண்டுள்ள நித்திய சத்திய அதிட்டானமாகிய அந்த குருவை, தக்ஷிணாமூர்த்தியை, பகவான் ரமணரைப் பணிவோம் போற்றுவோம்; சித்தம் நிச்சலம் ஆவோம்.

# இனிவரும் திருநாட்கள் – 2012

| | | | |
|---|---|---|---|
| *செப்டம்பர்* | 1 | *சனி* | *அருணை விஜய தினம்* |
| *அக்டோபர்* | 16 | *செவ்வாய்* | *நவராத்திரி தொடக்கம்* |
| | 23 | *செவ்வாய்* | *சரஸ்வதி பூஜை* |
| | 24 | *புதன்* | *விஜயதசமி* |
| *நவம்பர்* | 13 | *செவ்வாய்* | *தீபாவளி* |
| | 18 | *ஞாயிறு* | *கார்த்திகை தீப விழா தொடக்கம்* |
| | 27 | *செவ்வாய்* | *கார்த்திகை தீபம்* |
| *டிசம்பர்* | 29 | *சனி* | *ஸ்ரீ பகவானது 133-ஆவது ஜயந்தி* |

*ஆதி அருணாசலேசுவரர் திருக்கோயில், அடி அண்ணாமலை ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன, ஸ்வர்ணபந்தன மஹா கும்பாபிஷேக 15-7-2012 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குமேல் 10 மணிக்குள் நடைபெறவுள்ளது.*

# ரிபு கீதை

## தியாகராஜன்

*அத்வைத சொரூபத்தின் அபேத நிஷ்டை உரைக்கும் ரிபுகீதையின் 26 வது அத்தியாயத்தை மீண்டும் மீண்டும் பாராயணம் செய்தால் அது நம்மை சமாதி நிலைக்குக் கொண்டு செல்லும் என்று ஸ்ரீபகவான் அருளியுள்ளார்.*

*அந்த அத்தியாயத்தின் பாடல்களை, ஸ்ரீபகவான் அவ்வப்போது, அவை தொடர்பாக அருளியுள்ள விளக்கங்களோடு பக்தர்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம்.*

**எதனிடையில் காயிகமாஞ் செயலு மில்லை**
**யெதனிடையில் வாசிகமாஞ் செயலு மில்லை**
**யெதனிடையின் மானதமாஞ் செயலு மில்லை**
**யெதனிடையின் மற்றுமொரு செயலு மில்லை**
**யெதனிடையிற் பாவமற மெவயு மில்லை**
**யெதனிடையிற் பற்றுபல னுணுவு மில்லை**
**யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி**
**யம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய்**

**(26/7)**

**எதனிடையிற் கற்பனையே யென்று மில்லை**
**யெதனிடையிற் கற்பிப்போன் றானு மில்லை**
**யெதனிடையிற் பிரபஞ்ச முதிக்க வில்லை**
**யெதனிடையிற் பிரபஞ்ச மிருக்கவில்லை**
**யெதனிடையிற் பிரபஞ்ச மொடுங்க வில்லை**
**யெதனிடையி லெவையுமொரு காலு மில்லை**
**யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி**
**யம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய்.**

**(26/8)**

*சுய விருப்பமோ, தீர்மானமோ, பிரயத்தனமோ இன்றி சூரியன் உதயமாகிறது. சூரியக் கிரணங்கள் பட்ட மாத்திரத்தில் காந்தக்கல் அக்னியைக் கக்குகிறது, தாமரை மலர்கிறது, நீர்வற்றுகிறது. உலக மக்கள் தத்தம் கடமைகள், காரியங்களில் ஈடுபட்டு, இயங்கி முடிவில் அடங்கு கின்றனர். காந்தத்தின் முன் ஊசி அசைந்தாடுகிறது. இதுபோன்று, ஈசனின் சந்நிதான விசேஷமாத்திரத்தால் (வெறுமனே அவர் முன்னிலையில்) நடக்கும் முத்தொழில் அல்லது பஞ்ச கிருத்தியங்கட்கு உட்பட்ட ஜீவர்கள் தத்தம் கர்மானுசாரங்களைச் சேஷ்டித்து அடங்குகின்றனர். இது இவ்வாறேயன்றி, ஈசன் சங்கல்ப சகிதர் அல்லர் (அவரே தீர்மானித்து எதையும் ஆட்டிப் படைப்பவர் அல்லர்). ஒரு கருமமும் அவரை ஒட்டாது - அது, லோக கருமங்கள் சூரியனை ஒட்டாததும், மற்ற சதுர் பூதங்களின் குணா குணங்கள் எங்கும் வியாபகமான ஆகாயத்தை ஒட்டாததும் போல.*

*— (ரமண மகரிஷியின் பொன்மொழிகள் - பதிப்பு 2004, பக். 72)*

*யாவரும் உடலையே தானெனக் கருதுகின்றனர். அதனால், ஞானியையும் ஒருடலுடன் சம்பந்தப்படுத்தி அவனைப் பற்றி ஏதேதோ கேட்கின்றனர். ஆனால், அவனுக்கோ அவஸ்தை ஏதுமில்லை, கேள்வியில்லை, சந்தேகமுமில்லை. ஏகாத்ம ஸ்வரூபனே அவன். அவஸ்தாத்ரயமும் விக்ஷேபமும் சமாதியும் அஞ் ஞானிகளின் விவகாரம். ஆத்மாகாரனும் ஞானிக்கு அவை எவையும் சற்றுமில்லை.*

*— (வசனாம்ருதம், பாகம்-2, பதிப்பு 2000, பக். 144)*

*மேகங்கள் அடர்ந்திருப்பினும், புயல் வீசினும், ஆகாசம் அவற்றால் யாதோர் விகாரமும் உறாது எப்போதும் ஒரே விதமாய் நிர்மலமாயிருப்பது போலவே, பிராரப்தவசத்தால் நிகழும் கருவிகரணாதிகளின் பல்வகை இயக்கங்களால், ஞானி,*

*சற்றும் பாதிக்கப்படாது, ஒரேவிதமாய் நிர்மலப் பிரஹ்மா காரமாகவே இருப்பான். எவ்விதச் சூழ்நிலையிலும் ஓர் பதிவிரதை தன் பதியிடமே பரிபூரண அந்தரங்க ஈடுபாடுற்றிருப்பது போலவே ஞானியும் ஸ்வஸ்வ ரூபத்திலேயே, எவ்வெந் நிலைமை யிலும் இடைவிடா ரமிப்புடையவனாயிருப்பன். அவனது மௌனமே வாக்கு மனங்களுக்கெட்டா பிரஹ்ம ஸ்வரூபத்தின் உத்தம விளக்கமாகும். சிற்சிலகால் அவன் பேசினாலும் அப்பேச்சு ஆகாசவாணியைப் போல் அகந்தை முனைப்பின்றி யிருக்கும். குரு, சிஷ்யன், ஞானி, அஞ்ஞானி முதலாம் எப்பாகுபாட்டிற்கும் பிரஹ்மா காரனும் அவனுள்ளத்தே சற்றும் இடமில்லை. சுகதுக்கத் தொடர்பற்றவ னெனினும் சிலகால் அவன் அடுத்தோர் துயரில் அனுதாபமுற்றாற் போலுமிருப்பான். அவனது கோபமும் நலன்புரிவதாகவே யிருக்கும். அவனது எவ்வியக்கமும், அவன் வாழ்க்கை முழுதுமே, இயல்பாகவே பரோபகாரார்த்தமாகவே இருக்கும். ஜீவவகந்தை ஒய்ந்து, ஸ்வரூபானந்தனாய்த் திகழும் அவன் செய்ய வேண்டியதோ அடைய வேண்டியதோ எதுவுமில்லை.*

— *(வசனாம்ருதம், பாகம்-2/155-156)*

*சினிமாக் காட்சித் திரையின்மீது எத்தனையோ காட்சிகள் தோன்றி மறைகின்றன; திரையோ அவற்றால் எத்திரிபு முறாது ஒரே இயல்பாயிருக்கிறது. அவ்வாறே தான், நீயும் நானும் பிறரும் பிறவும் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருக்க, அடிப்படை யுண்மையாம் நமது நிஜஸ்வரூபம், என்றும், எத்திரிபுமற்று ஒரேயியல்பாய்த் துலங்கிக் கொண்டுள்ளது.*

— *(வசனாம்ருதம், பாகம்-2, பக்கம் 167)*

*'நான் மனிதன்' என்பதையே பாபம் எனக் கொள்ளலாம். ஆழ்ந்த தூக்கத்தில் நான் மனிதன் எனும் உணர்ச்சி இல்லை; பாப-புண்ணிய நினைவும் இல்லை. விழித்*

*தெழும்போது முளைத்தெழும் உடலுணர் வுடனேயே பாப உணர்ச்சியும் உண்டாகிறது. தன்னை மறைக்கும் எண்ண எழுச்சியே பாபம்.*

— *(ரமணரின் பொன்மொழிகள், பக். 75)*

*கே: புண்ய பாப பலன்களை நமதிஷ்டப்படி முன்பின்னுக ஏற்றுக் கொள்ளலாமென்று சிலர் சொல்கிருர்கள். அப்படித்தானு?*

*ப: பிற்காலத்தில் நிகழப்போவதைப் பற்றி வினவுவதேன்? பிறந்திருக்கிறேன், கர்ம பலன்களை அனுபவிக்கிறேன் என்று நினைப்பதே சரியா என்று முதலிற் பார்க்கலாம். தூங்கும்போது இப் பிரச்னைகள் சற்றும் இல்லை. இப்போது அவை கிளம்புவது எதனுலென்று பார்க்க வேண்டும்.*

— *(வசனாம்ருதம், பாகம்-2, பக்கம் 2-3)*

*கே: பற்றறல் என்பதென்ன?*

*ப: அகந்தைப் பற்றறலே பற்றனைத்தும் அறலாம்.*

*கே: பற்றறலென்பது எனதென்னும் அபிமானமறல் அல்லவா?*

*ப: நானென்னும் அபிமானமும் அறவே ஒழிய வேண்டும்.*

— *(வசனாம்ருதம், பாகம்-1, பக்கம் 184)*

*தூங்கும்போது, உடலும் அகந்தையுந் தோன்ருவிடினும் நாம் இல்லாது போகவில்லை; இருந்து கொண்டு தானிருக்கிருேம். விழித்துக்கொள்கிருேம்; அப்போதும் அதே நாமேதான் இருக்கிருேம். உடலுலகங்கள் தோன்ருமையும் தோன்றுவதுமே இவ்விரு நிலைமை களுக்கும் உள்ள பேதம். உலகம் மனத்துடன் தோன்றி, மனத்தோடொடுங்குகிறது. தோன்றி மறைவது நாமல்ல. மனம் தோன்றுவதற்கும் இருப்பதற்கும் ஒடுங்குவதற்கும் இடமாயிலகும்*

*அதுவே நாம்; இடையறாத அதிஷ்டான சைதன்யமே நாம்.*

— *(வசனாம்ருதம், பாகம்-1, பக்கம் 122)*

*கே: உள்ளது நாற்பதில் மனத்தின் விரிவே உலகமென்று சொல்லப்பட்டுள்ளது. ஆதலால், மனோபலமுற்றவனுக்கு உலகம் வசமாம் என்றுதானே பொருள்?*

*ப: உலகவடிவாய் மனம் விரிதலால், அது தன் பலத்தை யிழக்கிறது. அவ்வாறின்றி, வெளிமுகத்தே ஓடாது தன்னிலே நிற்றலே மனோபலமெனத் தகும்.*

*கே: அவ்வாறெனின், மனத்தின் இயக்கமே பெரும்பாலு மின்றிய ஒரு ஜடப்பிரகிருதி, தீவிர புத்தியியக்கம் வாய்ந்த ஓர் அறிவாளியினும் சிறந்தோன் ஆவனோ?*

*ப: மனத்தின் இயக்கமற்றிருப்பது ஜடத்தன்மையல்ல; மனவியக்கமே அறிவின் லக்ஷணமுமல்ல.*

*கே: நினைப்பற்றிருத்தலால் மனோபலம் எய்தப்படுமா?*

*ப: தமோகுணவசமாய் நினைப்பற்றிருத்தலால் யாதோர் பயனுமில்லை. ஒன்றிலே மனமூன்றுதலாலேயே மனோ பலம் எய்தப்படும். ஒன்றிலேயே நின்ற மனத்திற்கு அவ்வொன்றுமற்றுத் தன்னிலே தான் நிற்றல் எளிதாம்.*

*கே: ஆகவே, வேண்டுவது சித்த ஏகாக்கிரமேயன்றிப் பௌருஷமல்ல.*

*ப: பௌருஷமெனப்படும் அகந்தை அறவே யொழிந்தா லன்றிப் பரமபுருஷார்த்தம் சித்தியாது.*

— *(வசனாம்ருதம், பாகம்-2, பக்கம் 138-139)*

# சுவர்மறை சோலை

## ஜா. ஜயராமன்

*153. எல்லாம் அவனில் நண்பா! அவனே*
*எல்லாம்! உன் புன் இருப்பும்*
*சொல்லாம் அளவே! உன்னை இழக்கின்*
*இதய நரக மேசொர்க்கம் !*

*157. எதையும் அடைவாய் உன்னை விடின் உன்*
*சுயநல(ம்) அடக்கப் படா அசுவம் !*

*159. நீயேநீ! உன் விருப்பு வெறுப்(பு), அதுபோலும்*
*நின் நம்பிக்கை மறுப்பு !*

*161. பயம் எதிர்பார்ப்பும் நற்கதி தாரா !*
*நயமுடன் நீ மறையின் அவை வாரா !*

*163. இறைநுழை வாயிலில் அனைவரும் ஒன்றாம்*
*இம்மதத்தோ அன்(று) அம்மதத்தவரோ*
*எம்மதத்துக்கும் குறி அவனே !*

*166. காரண வாரணம் கொண்டு நீ*
*காரணனை அறிவாயோ ?*
*ஆரண ஆதவன் உதிப்பில் ஜீ-*
*-ரணமாம் அலை கலை மதியே !*

*(வேறு) (ரூபக நடை)*

*170. ஓர்*
*வாரத்(து) இருக்கை வழிப்போக்கன் சாவடி*
*தேர்! அத்தி(ன்) இருப்பு(ம்) இலாமையே !*
*பார்! இதில் போதல் வருதல் ஒன்றே !*

*175. நீஇருந்தென்ன? நீ போ(ய்)என்? உதிக்கு(ம்)*
*அருக்கன் ஒளிகுக்குடம் கூவுதற்கோ ?*
*வருக்க(ம்) உன்போலு(ம்) அவன் வாசலுக்கே !*

*178. ஞாலத்தின் வீதியில் வழியில்லை! உள்*
*ஓலத்தின் மூலத்தில் நாடிடுவாய் !*
*சற்போது நற்குணம், சிற்போது துற்குணம்*
*பாதையாம் பக்திக்கு நீ காத தூரம் !*

*182. உன்*
*அறிவறியாமை முகமூடி திருத்தி,*
*குறிபார்த்து பயமும் எதிர்பார்த்தலும்*
*சரிபார்க்க அவை இரண்டல்ல ஒன்றே !*

*186. உன்னுடை பரிசுநீ அறியின் மற்றோர்*
*உன்னை பெரிசு சிரிசு படுத்தி(ன்) என் ?*

*188. தூலக்கண் கொண்டவன் நீ அவனை*
*பாவனை செய்வாய் அவனும் உடன்*
*ஜாலக்கண் கொண்(டு) உன்னைப் பார்க்க உன்*
*பாலக்கண் ஞானக்கண் மாலற்(று) உதிக்கும்*

*192. சாரமில்லா இந்த நாட்டில்*
*கோரமா முன்பின் அலைக்கப்பட்டாய் சற்று*
*நேரத்தில் இந்நிலை தாண்டின்*
*ஜோராம் பேரன்பு லகான் கைபிடிக்கும் !*

*196. அற்ப உலகுப் பற்(று) இருக்கையில்*
*சொற்பமு(ம்) ஒவ்வா(து) அவ(ன்) உலகு.*
*மன்னி நீ அகங்கரிக்கும் வரை இறை*
*அன்னியன்! நண்ணவொணா(ன்) உனக்கு !*

*200. நீ*
*மரியாதவரை அடைவாயோ தெரி*
*-யாதவர் ஊரின் உளச்சாவி ?*
*குருவாய் மரணம் வருமுன்னே பெரு*
*வாயாம் சரணம் பெருவாயோ ?*

***205. தலைகீ ழாயும் நீயே நிற்கின் உன்***
***அன்(பு) அறிவும் நிலைகொள்ளா(து) அலையும் !***
***நீ பின்னும் வலையை சின்னாபின்னிப்பாய்! தன்***
***கூண்டைச் சிங்கம் வெளியேறுதல் போல் !***

***209. நேர்மைகொண்(டு) உயிரும் உளமும்***
***தீர்வை இப்பாதையில் உன்னைக்கரைத்து***
***உள்ளத்தைச் சேர் சூனியத்திருந்து***
***விள்ள ஒண்ணா இறை மதுவுண்ட வண்டு !***

***213. உதட்டில் மன்னிப்புக் கோர எழுமுன்***
***பதட்ட(ம்) இல்லாம(ல்) அளிப்பான் !***

***215. தானா(ம்) இவ(ன்) உன் இடையன் !***
***ஓநாயுடன் ஏனோ உன்னுடை கூட்டு ?***
***சகவாசம் செய்ய அழைக்கின்றான்***
***உபவாசம் தான் ஏனோ உனக்கு ?***

***219. குணங்கொண்டவ(ன்) உனை ரக்ஷிக்க***
***பிணம்போ(ல்) உறங்கு கின்றாய் !***
***நன்றாயிருக்கு(து) உன்செயல் ! நீ***
***நன்றியில்லா நவை இல்லாத நாயோ ?***

***223. உள்ளிருந்து நம் அழுக்கைக் கடைவான்***
***கொள்ளை அன்பன் நம்மிடம் நமைவிடவே !***
***எள்ளத்தகும் பாதியாம் தாயி(ன்) அன்(பு) ! அவன்***
***தெள்ளத்தெளிந்த பாசத்துநேர் பார்க்கின் !***

***227. து***
***-ரோகிக்கினும் நீ நன்நம்பிக்கை வி***
***-ரோதமற்(று) எப்போதும் போ(ல்)உனைப் பார்ப்பன்***
***தராதரச் செம்மலாம் தானே !***

***231. எண்ணத்தின் வாசனை அற்றவ(ன்)உன்மனத்***
***திண்மையையும் படைத்தான் உன்***
***இதய விண்ணப்பம் அவனறிவா(ன்)!ஐஉன் விண்-***
***ணப்ப(ம்) அறியு(ம்) அவன்விழி, எண்ணமாம்***

*உதிமதி போலென்(று)உன் துன்ப*
*மதி கொள்ளின, தன்சேரிலே உற்ற கழுதை*
*கதிபோலும்! பாம்புற்ற பழுதை !*

*238. தாக்குற்றவன் சன்னிதிநின்ற மோனம்*
*நாக்(கு)உற்ற நற்செல்வம் நாளுமே !*

*(வேறு) (சதுரச்ர நடை)*

*240. பாராங் கல்மே(ல்) இருளில் எறும்பின்*
*ஆராயும் கால் அறிவன் !*
*பாராமுகமாம் மாந்தர் மனத்தை*
*ஓராமலிவன் உணர்வன்! நீயும்*
*ஆராய்வாய் துணிவுற் றித்தை !*

*245. அன்பின் மன்னன் அவனே*
*அன்பால் ஜயிக்கப் பட்டோன்.*
*கடலை அடைந்த பின்னர்*
*அடைப்பாய் ஆற்றின் பேச்சை.*

*249. முயல்வாய் முழுமூச் சுடனே*
*இயல்பாய் இருக்கும் இடம் நாட! அவன்*
*அனுமதிக்க சன்னிதியி(ல்) உனை,*
*பினும் அவனை விடவரமுண்டோ ? அவன்*
*நண்பனாய் உனைத் தேரின் புவ*
*-னத்தில் பார்க்க மிச்சமிலை !*

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2012

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *ஆகஸ்டு* | 1 | *புதன்* | *காலை* 10.58 | *2* | *வியாழன்* | *காலை* 8.57 |
| *செப்டம்பர்* | 29 | *சனி* | *காலை* 8.53 | 30 | *ஞாயிறு* | *காலை* 9.23 |
| *அக்டோபர்* | 28 | *ஞாயிறு* | *இரவு* 12.12 | 29 | *திங்கள்* | *பகல்* 1.41 |
| *நவம்பர்* | 27 | *செவ்வாய்* | *மாலை* 6.26 | *28* | *புதன்* | *இரவு* 8.29 |
| *டிசம்பர்* | 27 | *வியாழன்* | *பகல்* 2.16 | *28* | *வெள்ளி* | *மாலை* 4.14 |

# பிராணார்ப்பணம்

## பாமதிமைந்தன்

**கரு உண்மை; உரு கற்பனை**

*ஆன்மிக வாழ்வின் உயர் பரிமாணங்களான திரவியத் தியாகம், அகங்காரத் தியாகம், பிராணத் தியாகம் மற்றும் பிராணார்ப்பணம் என்ற முக்கிய நிலைகளைப் பற்றிய ஒரு படைப்பு இது. — ஆசிரியர்*


திருவண்ணாமலை கந்தாஸ்ரமம் அன்று விழாக்கோலம் பூண்டிருந்தது. ஸ்ரீரமணரின் ஜெயந்தியைப் பக்தர்கள் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

மந்திரங்கள் முழங்கப் பெரும் யாகம் நடந்தது. வேத, கீதை பாராயண ஒலிகள் மலையிலும் எதிரொலித்தன.

ஸ்ரீரமணர் தன்மயானந்தராக எல்லாவற்றையும் நோக்கிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு கீரி அவரது பார்வையில் பட்டது! அந்தக் கீரி ஒவ்வொன்றையும் கவனித்து வந்தது. அதன் கண்களில் ஒரு தேடல். ஸ்ரீரமணரின் எதிரில் அவரது பக்தர்களான விளாச்சேரி ரங்கய்யரும், சுந்தரராமனும் அமர்ந்திருந்தனர். சுந்தரராமன் யாகத்தைப் பற்றிப் பெருமையாகக் கூறினார்.

அதற்கு ரங்கய்யர், "சுந்தரா, அக்னியில் ஆஹுதியாக நெய்யை ஊற்றிச் செய்யும் யாகம் சிறந்ததுதான். ஆனால் ஆன்ம சாதகன் எப்போதும் செய்ய வேண்டிய யாகம் ஒன்று உள்ளது..." என்றார்.

"எப்போதும் செய்யக்கூடிய யாகமா?" என்று சுந்தரராமன் கேட்டார்.



"ஆமாம் சுந்தரா, மனிதனின் எல்லாத் துன்பங்களுக்கும் மூலகாரணமான அகங்காரத்தை ஆத்மா எனும் யாகத் தீயில் அவன் தொடர்ந்து ஆஹுதி செய்வது பெரும் யாகம் என்று ரமண பகவான் கூறுவார்."

இருவரும் பேசிக் கொண்டிருந்தபோது, அங்குமிங்கும் சுற்றி வந்த கீரி ஸ்ரீரமணரின் திருமடியில் இயல்பாக வந்து அமர்ந்தது!

எதையும் வியந்து நோக்காத ஸ்ரீரமணரின் கண்களே அக்கீரியின் தோற்றத்தைக் கண்டு சற்று விரிந்தன. "மகாபாரதத்தில பொன்னிறக் கீரி வருமே, அது ஒங்களுக்கு ஞாபகம் இருக்கா?" என ஸ்ரீரமணர் கேட்டார்.

ரங்கய்யர் வியந்தபடி, ஆமாம் பகவானே, இந்தக் கீரியும் அது மாதிரிதானே...." என்பதற்குள் ஸ்ரீரமணர் கண் மூடினார். அவரது ஆழ்ந்த ஆன்மிக இருப்பு நிலையால் மனம் இழந்து நின்ற ரங்கய்யரும் கண்ணை மூடி ஆனந்தத்தில் மூழ்கினார். சுந்தரராமனும் தமது வியப்பானந் தத்தை வெளியிட முடியவில்லை. ஸ்ரீரமணரின் சஹஜானந்தம் அதைத் தடுத்தது. இந்தக் கீரியைப் புறக்கண்ணால் கண்டவாறே, இன்னொரு கீரியை மனக்கண்ணால் இருவரும் கண்டனர்.

குருக்ஷேத்திரப் போர் முடிந்துவிட்டது. தாமதமானாலும் தர்மம் வென்றுவிட்டது. இது நடப்பதற்காக எத்தனை எத்தனை உயிரிழப்புகள், கொடூரங்கள், பாவங்கள் நடந்தன. அவை அனைத்திற்கும் பரிகாரம் தேடி பாண்டவர்கள் அந்தப் பெரும் யாகத்தை நடத்தி, தான, தர்மங்கள் செய்து கொண்டிருந்தார்கள்.

பிரம்மாண்டமான யாகசாலையில், பாண்டவர்களிட மிருந்து பெற்ற தானங்கள் நம் பரம்பரைக்கே வரும் என்று கூறி வாழ்த்தியவர்கள் பலர். உலகம் இதுவரை காணாத யாகம் இது என்று புலவர்கள் பாடினார்கள்.

கர்ணன் மறைந்தாலும் அவனது தானம், தம்பியான தன் மூலம் தொடரும் என்று, அதோ, திரௌபதியுடன்

*தர்மராஜர் வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார். அப்போது யாக குண்டத்திற்கு அருகில் ஒரு கீரி வந்தது; அது அங்குமிங்கும் புரண்டது. வந்திருப்பது வெறும் கீரியல்ல. அதன் உடலின் பாதி பொன்னிறமாகவும், மீதி இயல்பான நிறத்துடனும் இருந்தது.*

*அந்தக் கீரி ஏமாற்றம் மிக்க குரலில், "சான்றோர்களே! இது மகாயாகம் என்று என்னால் கூற முடியாது..." என்றது. எல்லோரும் திகைத்தனர். தர்மராஜர், "சொல், கீரியே! உத்தம யாகம் இது இல்லையென்றால், வேறு எது?" என்று கேட்டார்.*

*"மாமன்னா, கேளுங்கள்...!" என்று கூறி, கீரி ஒரு கதையைச் சொல்ல ஆரம்பித்தது:*

*ஓர் அந்தணக் குடும்பம். தந்தை பண்டிதர். வாழ்க்கையில் எது வந்தாலும் அது இறைவனிடமிருந்தே வருவதைக் கண்கூடாகக் காண்பவர் அவர். மூன்று ஆண்டுகளாக அந்த நாட்டில் பஞ்சம் நிலவியது. ஒரு மாதத்தில் அவர்கள் உணவு பெறும் நாட்களை எண்ணுவதற்கு ஒரு கைவிரல்களே அதிகம். அன்று அக்குடும்பத்திற்கு நான்கு கைப்பிடியளவு தினை மாவு கிடைத்தது. இறைவனுக்கு அதைப் படைத்து, ப்ரம்மார்ப்பணம் ப்ரம்ஹ ஹவிர்.... என ஓதிவிட்டு, வாயிலிடச் சென்றால்..., தடதடவென ஓசை. கதவைத் திறந்தால், ஓர் அதிதி. ஓ! அவ்வாறு வருவது ஆண்டவனல்லவா! பசி ஐயா" என்று கூறி வந்தவர் மயங்கினார்.*

*தந்தையோ உடனே, "சுவாமி, இந்த மாவையும் நீரையும் கலந்து உண்ணுங்கள்" என்று கூறி வழங்கினார். வந்தவர் அதை அப்படியே விழுங்கினார்.*

*பின், "ஐயோ, சிறிது உணவே தந்து பசியை மேலும் தூண்டிவிட்டீர்களே...!" என்றார் அவர்.*

*பண்டிதரின் மனைவி தன் பங்கைத் தந்தார். "தந்தை செய்து வரும் தர்மத்தை நான் தொடர்வதுதான் முறை"*

*என்று மகன் தன் பங்கை வழங்கினார். கணவன் ஆற்றும் தர்மத்தில் மனைவிக்கும் பங்குண்டு" என மருமகளும் வழங்கினார். எல்லாவற்றையும் உண்ட அந்தணர் அவர்களை வாழ்த்திவிட்டு விடை பெற்றார். விடையை வாகனமாக உடையவரே இப்படி வந்து தர்ம சூட்சுமத்தை விளக்கிச் சென்றாரோ!*

*கீரி கதையைத் தொடர்ந்தது:*

*மன்னா! அந்த நால்வரும் அன்றிரவே இறந்து சொர்க்கம் ஏகினர். அவர்களது உயரிய தியாகத்தைக் கண்ட நான் அங்குச் சிந்தியிருந்த அப்புனித மாவின் மீது அழுது புரண்டேன். என்ன ஆச்சரியம், உடனே என் உடலின் பாதி பொன்னிறமானது...!"*

*கீரி கூறியதைக் கேட்டு, தேவர்களை மகிழ்விப்பதற்காகத் திரவியங்களை வழங்குவதே யாகம் என எண்ணிய அங்கிருந்த கர்மகாண்டிகள் நாணினர். அங்கு ஒரு மரியாதைக்குரிய மௌனம் நிலவியது.*

*தான் செய்வது வெறும் திரவிய யாகம் என்பதை உணர்ந்த தர்மராஜர், "போற்றுதலுக்குரிய கீரியே, உமது மீதிப் பாதி உடல் எப்போது பொன்நிறமாகும்?" என்று வினவினார்.*

*அதைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன் அரசே! தங்களது உயிரையே பிறருக்காக வழங்கிய அந்த அந்தணக் குடும்பம் செய்த அரிய செயல் போல், வேறு எங்காவது நடக்கிறதா என நானும் பல காலமாக யாகங்கள், தானங்கள், பூஜைகள் நடக்கும் இடங்களிலெல்லாம் தேடித் திரிந்து கொண்டிருக்கிறேன். ம்..., பலனில்லை" என்று கூறிவிட்டு கீரி சென்றது.*

*ரங்கய்யர், மகாபாரத காலத்திலிருந்து கலியுகக் காலத்திற்கு மீண்டார். ஸ்ரீரமணரின் மடியில் அதுவரை அமர்ந்திருந்த கீரி மெல்ல வேறு பக்கம் சென்றது. அப்போது யாரோ ஒருவர் முல்லைப்பூ மாலையுடன்*

*வந்து, "சுவாமி, தியாக உணர்வு என்னுள் மலர அருளுங்கள்" என்று கூறி ஸ்ரீரமணரது திருக்கரங்களில் அதை வழங்கினார்.*

*ஸ்ரீரமணர், "மாலையை அவா ரெண்டு பேருக்கும் அணிவிச்சுடு. அவாதான் தியாகராஜாக்கள். தியாகம் செய்றதிலே சக்கரவர்த்திகள்" என்றார். அவர் மாலையை அணிவிக்கச் சொன்னது, அங்கு மாட்டப்பட்டிருந்த சிவபெருமான் மற்றும் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவுருவப் படங்களுக்குத்தான்!*

*ரங்கய்யரும் சுந்தரராமனும் ஸ்ரீரமணரின் மடியில் இருந்த கீரியை மீண்டும் பார்த்தனர். ஆனால் அது தந்த வியப்பைவிட மகரிஷியின் சாந்நித்தியம் அதிக ஆனந்தத்தைத் தந்தது.*

*சுந்தரராமன், "சிவனுக்கும் ஸ்ரீராமகிருஷ்ணருக்கும் மகரிஷி ஏன் மாலையிடச் சொன்னார்? சிவபெருமான் உலகைக் காக்க ஆலகால விஷத்தைத் தமது தொண்டையிலே நிறுத்திக் கொண்டார். ஸ்ரீராம கிருஷ்ணரோ மக்களின் பாவங்களை ஏற்றுக் கொண்டதால் அவருக்குப் புற்றுநோய் வந்தது. இருவரும் மக்களுக்குத் தொண்டாற்றவே தொண்டையில் தீமைகளை ஏற்றுக் கொண்டு தியாகம் செய்ததை மகரிஷி இப்படி உணர்த்தினாரோ!" என்றார் நெகிழ்ந்து.*

*நானும் அப்படித்தான் நினைக்கிறேன். சுந்தரராமா, "பிறருக்காக ஒரேடியாகத் தன் உயிரை - அதாவது பிராணனைத் தருவது பிராணத் தியாகம். அது ஒருமுறை மிகச் சிறந்தவர்களால் மட்டுமே செய்ய முடியும். அதைவிட அவதாரபுருஷர்கள் உலக நன்மைக்காகத் தங்களது பிராணனையே தொடர்ந்து அர்ப்பணித்து வருகிறார்களே, அதுதான் மிக ஒசத்தியான யாகம்" என்றார் ரங்கய்யர்.*

*சில மரங்கள் ஒரு முறை மட்டுமே அடுப்பு எரிக்கப் பயன்படும். வைரம் பாய்ந்த சில மரங்கள் தூணாகவோ,*

உத்தரமாகவோ மாறி, பல காலம் கட்டிடத்தைத் தாங்கி நிற்கும். அதுபோல் மகான்களுக்கும் அவதார புருஷர் களுக்குமே வித்தியாசம் உள்ளது" ஆம் ரங்கா! ராமகிருஷ்ண பரமஹம்சரைப் பற்றிப் பாடும்போது சுவாமி விவேகானந்தர், ப்ராணார்ப்பண ஜகததாரண - அதாவது உலகை உத்தாரணம் செய்ய பரமஹம்சர் தன் பிராணனையே அர்ப்பணம் செய்பவர் என்கிறார். கிரீஷ் போன்ற பலரின் பாவங்களை ஏற்றுக் கொண்டு அவர்கள் அனுபவிக்க வேண்டிய கஷ்டங்களையெல்லாம் பரமஹம்சரே அனுபவித்தார்" என்றார் சுந்தரராமன் கண்கள் கசிய!

ஸ்ரீரமணரைப் பார்த்தபடி, சுந்தரராமன் கூறியதையும் கேட்ட ரங்கய்யர், "ஆஹா, அருளாளர்களின் கருணையே தனிதான். தியாகராஜரால்தான் பிராணார்ப்பணம் செய்ய முடியும்" என்றார்.

"ஆமாம், அவர்களது பிராணார்ப்பணம் என்ற உயர் தியாகம், சிவபெருமான் ஆலகால விஷத்தை ஏற்றுக்கொண்ட மாதிரி" என்று கூறிய சுந்தரராமனிடம் ரங்கய்யர், "இதோ, நம் முன்னுள்ள ஸ்ரீரமண பகவானும் அப்படித்தானே...?" என்றார் விம்மியபடி.

அப்போது ரங்கய்யரின் நினைவில் சட்டென ஒரு சம்பவம் மின்னலடித்தது.

ஒருமுறை ஸ்ரீரமணரிடம் முரட்டு மனிதர் ஒருவர் வந்து, "நீங்கள் ஒரு மகாத்மாவா? நீங்கள் உண்மையில் உடலுணர்வைக் கடந்தவர் என்றால், இதோ, இதைக் குடியுங்கள்" என ஒரு புட்டியைத் தந்தார்.

அவர் தந்தது என்ன என்பதை அறிந்த பிறகும் ஸ்ரீரமணர் குடித்தார்! உடனே ஸ்ரீரமணர் வாந்தியெடுத்தார். ஆம், அது விஷம். அதைத் தெரிந்தே குடித்தார்.

பக்தர்கள் ஓடோடி வந்து விஷத்தைக் கக்க வைத்தார்கள். தெய்வாதீனமாக மகரிஷி உயிர் தப்பினார். அப்போதும்

*விஷம் தந்தவனை வாழ்த்தவே செய்தது அவரது திருவாய்! அச்சம்பவத்தை எண்ணி உணர்வு மேலீட்டால் ஸ்ரீரமணரை அணுகிக் கைகூப்பி ரங்கய்யர், "பகவானே! அண்ணா மலையார் கோவிலில் நீங்கள் பல காலம் சமாதி நிலையிலேயே இருந்தீர்கள். அப்போது உங்கள் உடலின் பின்பாகம் மண்ணோடேயே ஒட்டிவிட்டது! அந்த மேலான நிலையிலேயே நீங்கள் சமாதியில் ஆழ்ந்திருக்காமல், பக்தர்களின் நன்மைக்காக இறங்கி வந்து அருள் புரிகிறீர்கள்!" என்று கூறிக் கண்ணீருடன் வீழ்ந்து வணங்கினார்.*

*மகரிஷியின் வதனத்தில் மதுரப் புன்னகை. தமது மடியில் உடல் முழுவதும் பொன்னிறமாக மின்னிக் கொண்டிருக்கும் கீரியை அன்புடன் தடவிக் கொடுத்தார் ஸ்ரீரமணர்.*

*நீலகண்ட தியாகராஜாவை ஸ்ரீரமணரிடம் ரங்கய்யர் கண்டார். அந்த மகா தியாகத்தை இன்று இந்தக் கீரியும் கண்டதால்தான் இவ்வாறு பொன்னாக மின்னுகிறதோ! ஆம், அது அப்படித்தான் இருக்கும். அன்று பாதி உடல் பொன்னாக மின்னிய கீரியிடம் தர்மராஜர் கேட்ட கேள்விக்கு, இன்று இந்தக் கீரி முழு உடலும் மின்னும்படியாக மகரிஷியின் மடியில் அமர்ந்து பதில் பெற்றதோ! ஆதாரம் : சத்குரு ஸ்ரீரமண மகரிஷி, சரிதமும் உபதேசமும் பாகம் 1, பக்கம் 616. சுவாமி விவேகானந்தர், ஞானதீபம் பாகம் 1 - பக் 174.*

*நன்றி: ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்*

# ஸ்ரீ பகவானின் "ஆன்ம வித்தையை விளக்கும் 'ஆழ் துயிலின்' அரிய தத்துவங்கள்"

*1. ஆழ் துயில்/சுஷுப்தி என்னும் நிலையின் தன்மை பற்றிய ஸ்ரீ பகவானின் விளக்க உரை/தெளிவுரை/ விரிவுரை:*

*[வச.2/85] கே: நான் யாரென்று பார்த்தால் ஒன்றும் புரியவில்லை. ஒன்றும் தோன்றவில்லை.*

*ஸ்ரீபக: தூக்கத்தில் நாம் எப்படியிருக்கிறோம்? நானெனும் எண்ண எழுச்சியற்று சும்மாயிருக்கிறோம். அதனின்று விழிக்குங்கால் அகந்தையும், அதைப் பற்றிய பிற எண்ணங்களும் எழுந்து நமது இயல்பேயாம் ஆனந்தத்தை மறைத்து விடுகின்றன. ஆகவே சுகமாய் இருக்க விரும்புபவன் தோன்றி மறையும் அகந்தையையும் அதைப் பற்றி வரும் எண்ணத் தொடரையும் விவேகத்தால் ஒழிக்க வேண்டும்.*

*[வச.2/181] ஸ்ரீபக: தேச காலங்கள் மனோமயம். நினைப்பற்று நின்றால், உலகத்தைப் பற்றியோ அதன் வருங்காலத்தைப் பற்றியோ பிரச்னை எதுவும் எழாது.*

---

*★ மிக மிக நுணுக்கமாகக் கிரஹித்துக் கொள்ள வேண்டிய விளக்கங்கள்) { } இதனுள் உள்ள குறுங்குறிப்பு ஸ்ரீ பகவானது அல்ல.*

*நூற்குறிப்பு விவரங்கள்:*

*வச. 1/2 - ஸ்ரீ பகவத் வசனாம்ருதம் பாகம் 1/2, பதிப்பு 2004/2000; தே.மு - அனுதினமும் ஸ்ரீ பகவானுடன், பதிப்பு-2003; ரம.பொன் - ஸ்ரீ ரமண மகரிஷியின் பொன்மொழிகள், பதிப்பு-2004.*

*கே: தேச காலங்களைப்பற்றி நாம் நினையாவிடினும் அவை இருந்துகொண்டுதானே இருக்கின்றன.*

*ஸ்ரீபக: தேச காலங்கள் இதோ நாங்கள் இருக்கிறோமென்று உங்களிடம் வந்து சொல்கின்றனவா? தூக்கத்தின் போது தேச காலங்கள் உணரப்படுகின்றனவா?*

*கே: தூக்கத்தில் நான் உணர்வற்றிருந்தேன்?*

*ஸ்ரீபக: நீ இல்லாது போகவில்லையே! இருந்துகொண்டுதானே இருந்தாய்!*

*கே: தூக்கத்தின்போது நான் எங்கிருந்தேனோ, இவ்வுடலில் நான் இல்லை. விழிக்குமுன் உடலுக்கு நான் மீண்டேனென்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.*

*ஸ்ரீபக: உடலை விட்டு வெளியே போகிறதுமில்லை; திரும்பி வருகிறதும் இல்லை. இருந்தபடியேதான் நீ இருக்கிறாய். விழிப்பில் நினைப்புக்களோடிருக்கிறாய்; தூக்கத்தில் நினைப்பற்று சுகமா யிருக்கிறாய்.*

*[வச.2/189] ப: நீ தூங்கும்போது உலகம் இருக்கிறதா?*

*கே: ஆஹா. இல்லாமலென்ன? இருந்துகொண்டுதான் இருக்கிறது.*

*ப: தூங்கும்போது நீ அதைப் பார்க்கிறாயா?*

*கே: நான் பார்க்காவிடில், விழித்திருக்கும் பிறர் அப்போது அதைப் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறார்கள்?*

*ப: பிறர் உலகைப் பார்த்துக்கொண்டிருப்பது நீ தூங்கும் போதே தெரிந்ததா, அல்லது, விழித்தபின் நீ அவ்வாறு ஊகிக்கிறாயா?*

*கே: விழிப்பு நிலைமையிலேயே அவ்வாறுணர்கிறேன்.*

*ப : ஆகவே, நீ பேசுவது விழிப்புநிலைமையைப் பற்றியே யன்றி, தூக்க நிலைமையின் அனுபவத்தைப் பற்றியன்று.(★) ஜாக்ரத்திலும் ஸ்வப்னத்திலும்*

மனமிருப்பதால், மனோமயமாம் உலகு காணப் படுகிறது. தூக்கத்தில் மனமொடுங்க, அத்துடன் உலகமும் ஒடுங்கிறது. மீண்டும் விழிக்குங்கால், மனமெழுகிறது; அத்துடன் மனோமயமேயாம் உலகும் காணப்படுகிறது. தூக்கத்தின்போது ஒடுங்கியிருந்த அகந்தை விழிக்குங்கால் உடலுடன் தன்னை சம்பந்தப்படுத்திக்கொண்டு உலகைக் காண்கிறது. ஆகவே உலகம் மனோமயமே. மனத்தைவிட்டு அதற்கோர் இருப்பேயில்லை.

கே: அதெப்படி?

ப: இம்மனம் கனவில் ஒரு உலகையே சிருஷ்டிக்கிறதே! அவ்வாறேதான் நனவிலும், கனவு குறுகிய காலத்ததாகவும், நனவு நீண்ட காலத்ததாகவும் தோன்றுகிறது. கனவோ, நனவோ, காண்பான் ஒருவனின்றிக் காட்சி எதுவும் தோன்றமுடியாது. காண்பான் இவ்வுடலா?

கே: உடல் எப்படிக் காணும்? காண்பான் மனமாம் நானே.

ப: ஆனால், மனமற்ற துயிலிலும் நீ இருக்கிறாயே!

கே : தூக்கத்தின்போது நான் இருக்கிறேனா, எப்படியிருக்கிறேன் என்று ஒன்றும் தெரியவில்லை.

ப: தூக்கத்தின்போது நீ இல்லாது போயின், அதற்கு முன் நிகழ்ந்தவற்றை எப்படி நீ நினைவுறுகின்றாய்? மேலும் சுகமாகத் தூங்கினேன் என்பது எல்லோருக்கும் சர்வ சாதாரணமாம் அனுபவம். ஆகவே, தூக்கத்திற்கு சாக்ஷியாய்த் தான் அப்போதிருப்பதுறுதி. தூக்கத்தில் நாம் இருப்பது ஸ்வானுபவம் (★). உலகம் அவ்வாறு நம்மை எதிர்பாராது தானே தோன்றுகிறதா? (★)

கே: தூக்கத்தின்போது உலகம் தோன்றாவிடினும் இப்பொழுது தெளிவாய் என் முன் தோன்றுகிறது. அதை நான் ஒப்பாவிடில் இடறி விழுவேன். ஆகவே உலகத்தை ஒப்பியாக வேண்டும்.

*ப: இடறிக்கொள்கிற காலா நான் இடறிக்கொண்டேன் என்று சொல்கிறது?*

*கே: இல்லை. நானே அவ்வாறு சொல்கிறேன்.*

*ப: இந்த 'நான்' யார்? அது உடலுமன்று, மனமுமன்றென முன்னரே கண்டோம். விழிப்பு கனவு துயிலென்னும் மூன்று அவஸ்தைகளையும் உணர்வது இந்த நானே. அவஸ்தாத்ரய ஸாக்ஷியாம் நான் அவஸ்தைகளால் பாதிக்கப்படுவதில்லை. சினிமாவில் திரைமீது தோன்றி மறைபவை திரையை எவ்விதமும் பாதிப்பதில்லை. அவ்வாறேதான் ஜாக்ரத்ஸ்வப்னத் தோற்றங்களும், அவையற்ற சுழுத்தியும் ஆத்மாவை எவ்விதமும் பாதிப்ப தில்லை. இவ்வுண்மையை நாம் அனுபவித் துணர்ந்தால் தோன்றி மறையும் வாழ்க்கை நிகழ்ச்சிகளால் சற்றும் பாதிக்கப்படாது, சாந்திமயமாய், ஆனந்தமயமா யிருக்கலாம்.*

*[வச.1/77] கே: தூங்கும்போது உலகம் எனக்குத் தோன்றவில்லை; ஆனால் பிறர் அதை அப்போது பார்க்கின்றனரே!*

*ப: ஆம், ஆம். அந்த உலகம், "என்னை அறிந்தாயே! உன்னை நீ அறிந்தாயா?" என்று நம்மைப் பார்த்து நகைக்கிறது. மனத்தின் விரிவே உலகம். மனமென்பது என்னவென்று தெரிந்துகொண்டு பிறகு உலகைப் பார்ப்போம். அப்பொழுது உலகம் தன்னிலும் அன்னியமல்லவென்பது புரியும்.*

*கே: நாங்களும் பிறருமிருப்பது எங்களுக்குத் தெளிவாய்த் தெரிவதுபோலவே பகவானுக்கும் தெரிகிறதா, இல்லையா?*

*ப: சந்தேகம் யாருக்கு? தெரிந்தவன் சந்தேகிக்க மாட்டான். சந்தேகம் தோன்றினால், நாம் இன்னும் தெரிந்து கொள்ளாததன் அடையாளமே அது.*

*[ரம. பொன். 79] கே. கண் விழித்ததும் உலகைக் காண்கிறேன். தூக்கத்தில் இருந்தவனும் விழித்துக் கொண்டவனும் நானே தானே?*

*ஸ்ரீபக: ஆனால் தூங்கிக் கொண்டிருந்தபோது உலகம் மறைந்தது. ஆகவே மனம் எழுந்தால் உலகம் தோன்றுகிறது; மனம் ஒடுங்கினால் உலகம் மறைகிறது. ஆதலின் உலகம் மனோமயமே. ஆனால் மற்ற ஆழ்ந்த தூக்கத்திலும் நாம் இடையறாது இருக்கின்றோம். அவ்வாறு எல்லா நிலைகளிலும் சற்றும் மாறாது, தொடர்ந்திருக்கும் உண்மையான தன்னையே தான் உணர வேண்டும்.*

*[வச.1/92] கே: பகவான் சொல்வது எனக்கு விளங்கவில்லை.*

*ப: எனக்கு விளங்கவில்லையென்று கூறுவது யார்? உடலா, அல்லது வேறு ஏதாவதா?*

*கே: விளங்கவில்லை யென்பது உடலல்ல. மேற்கொண்டு புரியவில்லை. பகவானே விளக்கியருள வேண்டும்.*

*ப: இப்பொழுது உடலிருப்பது நமக்குத் தெரிகிறது. தூக்கத்தின்போது உடலிருப்பது தெரியாவிடினும் நாம் இல்லாது போகவில்லை. விழித்ததும், உடலை நானென்றபிமானித்துக் கொண்டு என்னையே எனக்குத் தெரியவில்லை என்கிறோம். தூக்கத்திலோ நாம் அவ்வாறு நினைக்கவில்லை. நினைப்பற்று வரையற்றிருக்கிறோம். விழித்ததும், மனத்தால் நம்மை நாமே உடலாகச் சுருக்கிக் கொண்டு என்னை எனக்குத் தெரியவில்லை என்கிறோம். அவ்வாறு துன்பப்படுவது எதற்கு? நாம் நாமாகவே ஆனந்தமாயிருக்கலாமே!*

*தூக்கத்தில் நானென்னும் அகந்தையெழுச்சி இல்லை. விழித்ததும் நானென்று அது கிளம்பி, உடலோடு தன்னை சம்பந்தப்படுத்திக் கொள்கிறது. இவ்வாறு கிளம்புகிற*

*அகந்தை எதுவென்று அகமுகத்தே கூர்ந்து கவனித்தால், அவ்வகந்தை அழிந்துபோம். நினைப்பேதுமற்ற நித்யாத்ம சொரூபமே மிஞ்சி நிற்கும். அதுவே நாம். இதற்குமேல், என்ன சொல்லமுடியும்? வெளிவிஷயங்களைப் பற்றி யெனில், இப்படியப்படியென்று சொல்லலாம். நம்முள் நாமாயிருப்பதை நாமேதான் ஒருமுகமாய் உள்ளாழ்ந்துணர வேண்டும்.*

*[வச.2/225-227] ப: ஸ்தூலப்பிரபஞ்சத்தில் நீ இருப்பதாகச் சொன்னாய். ஆழ்ந்த தூக்கத்தில் எந்தப் பிரபஞ்சத்தில் நீ இருக்கிறாய்.*

*கே: அப்போதும் ஸ்தூலப் பிரபஞ்சத்திலேதான் நான் இருப்பதாகக் கருதுகிறேன்.*

*ப: நான் கருதுகிறேனென்று சொல்வது விழிப்புலக அனுபவம். அது ஒருபுறமிக்க, தூக்கத்தில் நீ இருக்கிறாயல்லவா?*

*கே: ஆம், அப்போதும் நான் இருக்கிறேன், ஆனால் நான் அப்போது இயங்கவில்லை.*

*ப: இயக்கமும் இயக்கமின்மையும் ஒருபுறமிருக்கட்டும். ஆழ்ந்தவுறக்கத்தும் நீ இருந்தாய். அதே நீதான் இப்போதும் இருக்கிறாய்.*

*கே: ஆம். அவ்வாறே.*

*ப: ஆனால் ஒரே வித்யாசம். தூக்கத்தில் நினைப்பொன்றுமில்லை. விழிப்புநிலைமையில் நினைப்பியக்கம் இருக்கிறது.*

*கே: ஆம்.*

*ப: இவ்விருவியல்புகளில் உனதுண்மையியல்பு எது? நினைப்போடிருப்பதா, நினைப்பற்றிருப்பதா?*

*கே: இப்பொழுது புரிகிறது. தூக்கத்தில் நானிருந்ததா யுணரவில்லையே!*

ப: இப்போது அப்படிச் சொல்கிறாய். அப்படியெனில் தூக்கத்தில் நீ இல்லாது போனாயா?

கே: தூக்கத்தில் நானில்லாது போனேனென்று சொல்வதற்கில்லை.

ப: ஆகவே, தூக்கத்திலும் விழிப்பிலும் தொடர்ந்திருப்பதே நமதியல். அவ்விருப்பு உணர்வுமயம். என்றென்றும் இடையறாது தொடர்ந்திலகும் உணர்வுமயமாம் இருப்பே நாம். ஸச்சித்தே நாம்.

கே: ஆனால் இவ்வுண்மையை உணர்தற்கும் நினைப்பு வேண்டியிருக்கிறதல்லவா?

ப: ஆம். ஆனால் அது நினைப்புவழியே போகும் நினைப்பல்ல; நினைப்பனைத்தையும் ஒழிக்கும் நினைப்பு.(★) {ஸ்ரீபகவான் அழுக்கை அழிக்கும் ரப்பர். அத்தோடு தானும் அழிந்து கொண்டேபோய் முடிவில் இல்லாது போவதுபோல், ஆத்ம விசாரத்தில் ஈடுபடும் மனம்/நினைவு மற்ற நினைவுகள் வராது அழித்து, முடிவில் தானும் - நினைப்பவனையும்/அகந்தையையும் - அழித்து ஒழியும் என்பார் நொச்சூர் வேங்கடராமன். ஸ்ரீ பகவானின் பிரசித்தி பெற்ற உவமை 'பிணம் சுடும் தடி'}

கே: அனுபவநிலை அவாவென்பது சற்றுமற்றவிடம். ஆனால் மனிதன் எப்படி அவாவொன்றுமே யில்லாதிருப்பது? அவாவேதுமற்றவனை மனிதனென்று எப்படிச் சொல்வது?

ப: இயக்கம் எதுவுமற்றிருப்பினும், தூக்கத்தில் நாம் இல்லாது போகவில்லை. அப்போது உடலுணர்வில்லை, உடலளவாய் நாம் நம்மைச் சுருக்கிக்கொள்ளவில்லை; தனக்கயலாய் யாதொன்றும் அப்போது தோன்றவுமில்லை. இப்போது விழிப்பு நிலையில் அதே நாம்தான் இருக்கின்றோம்; ஆயினும் உடலுணர்வுதித்து உடலளவாய் நம்மை சுருக்கிக் கொண்டிருக்கிறோம்; அதனால் உள்வெளியென்னும் பேதமுண்டாகி,

*விஷயங்களை நமக்கயலாய் வெளியே யிருப்பனவாகக் கண்டு அவற்றிடையே விருப்பு வெறுப்புறுகின்றோம். தூக்கத்திலோ, உள்வெளி முதலிய எண்ணம் எதுவுமின்றி விஷயத்தோற்றம் சிறிதுமின்றி, சுகதுக்கவுணர்வின்றி அமைதிமயமாயிருந்தோம். எந்நினைப்பும் அவாவுமின்றி யிருப்பதைவிட்டு அவற்றை வருவித்துக்கொண்டு வருந்துவதேன்?*

*[வச.1/77]* கே: தூக்கத்திலிருந்து நாம் விழிப்பது, ஒளி ஒலி முதலிய வெளியுலகின் அலைகள் நம்மீது மோதுதலாலேயே யென்று கருதுகிறேன்.

*ப: பார்ப்பவனின்றி உலகம் எப்படி யிருக்கமுடியும்? பார்க்கும் உணர்வு தோன்றுவதும் மறைவதுமாயிருக்கிறது. அதிஷ்டான சைதன்யமோ தோன்றாது, மறையாது, எப்போதும் பரிசுத்த மாயிருக்கிறது. அதனிடம் பார்ப்பவனும் அவனது விரிவேயாம் உலகமும் தோன்றி மறைகின்றன. (★)*

*[வச.1/7-8]* கே: தூக்கம் என்பது ஒன்றுமில்லாத சூன்யமல்லவா?

*ப : சூன்யத்தை யுணர்பவன் யாரெனப் பார். எப்போதாகிலும் உன் இருப்பை நீ மறுக்க முடியுமா? எப்போதும், எல்லா அவஸ்தைகளிலும் உள்ள ஆத்ம ஸ்வரூபம் ஒன்றே.*

கே: தூக்கத்திலிருப்பதுபோல் இருந்துகொண்டு மயங்காது விழித்திருக்கவேண்டுமா?

*ப: மயங்காது விழித்திருப்பதுதான் விழிப்பு நிலை; அங்கே தூக்கத்திற் கிடமில்லை. அதைத்தான் 'தூங்காது தூங்கல்' என்று சொல்வார்கள். அப்படியின்றி, நினைப்பிற் கிடங்கொடுத்தால், அது எங்கெங்கோ கொண்டுபோய் விடும்; ஓயாத குழப்பமும் சிக்கலும் சூழ்ந்துகொள்ளும்.*

கே: ஆகவே, நினைப்பின் மூலம் எதுவென்று நாடிச் செல்ல வேண்டும்.

*ப : ஆமாம். அப்படியேதான். மூலத்தை நாடினால் நினைப்புகள் மறைந்துபோம்; ஆத்மாவே மிஞ்சி நிற்கும்; உண்மையில், ஆத்மாவிற்கு உள் வெளி யொன்றுமில்லை. அவையெல்லாம் அகங்காரத்தின் கற்பனையே. உபாதிகளொன்றுமின்றிப் பரிசுத்தமாய்த் தானே தானாய்ப் பிரகாசிக்கிறது ஆத்மா.*

*கே : அதைப் புத்தியினாற்றானே தெரிந்துகொள்கிறோம். அதனால் புத்தி ஸாக்ஷாத்காரத்திற்கு அனுகூலமாம் துணைதானே?*

*ப: ஆம்; ஓரளவு துணைதான். ஆனாலும், ஆத்மா புத்தியை கடந்துள்ளது; புத்தியும் ஒடுங்கிய விடமே ஆத்ம ஸ்வரூபம். (மனத்துடன் பஞ்சேந்த்ரியங்களும் ஓய்ந்து, புத்தியின் இயக்கமும் அற்ற விடத்தையே பரகதி யென்று அறிஞர் கூறுவர்-கடோபநிஷத்)*

*கே: என் ஸாக்ஷாத்காரத்தால் பிறருக்கு அனுகூலம் ஏதாவதுண்டா?*

*ப: ஆஹா, நிச்சயமாயுண்டு. அதுதான் உத்தமமான பரோபகாரம். ஆனால், அங்கே உதவுவதற்கு அன்னியர் யாருமில்லை. நகைகள் எத்தனை விதமாயினும் பொன் ஒன்று தானே! அப்படித்தான், அறிந்தவனுக்கு ஆத்மா ஒன்றே விளங்கும். உடம்பு நாமெனில், வெவ்வேறு நாமரூபங்கள் தோன்றும்; உடல் நாமல்ல வென்று தள்ளிவிட்டால், உடலுணர்வோடு அன்னியர் என்னும் பேத புத்தியும் ஒழிந்துவிடும்.*

*பின் அட்டை:*

*பசு லட்சுமி சமாதிமேல் எழுப்பப்பட்ட சிலை உருவுக்கு பசு லட்சுமி ஆராதனை (13-6-2012) அன்று வெள்ளிக் காப்பு அலங்காரம்.*



# நான் யார் தெரியுமாவிலிருந்து நான் யார் வரை

***பகுதி -13***

Dr. *ஏ.வி.ராஜகோபாலன்*

*ஆதி சங்கர பகவத்பாதர் அத்வைத மதத்தை உலகமெங்கும் பரப்பினார். தத்துவ உலகில், அத்வைதம் ஓர் உன்னத ரத்னமாகக் கருதப்படுகிறது. ஆயினும், இது நடைமுறையில் கொண்டு வருவதற்குச் சற்றுக் கடினமான மார்க்கம். இதைக் கருத்தில் கொண்டே ஸ்ரீ சங்கரர், இதை எளிதாக சாமானிய மக்களையும் சென்றடையும் வகையில் சில சீரிய நூல்களை அருளிச் செய்தார். அந்த வகையில் பஜகோவிந்தம் என்ற நூல் புகழ்பெற்ற ஒன்றாகும். அந்த வரிசையில் அதிகம் அறியப்படாத மற்றொரு நூல் சிவ மானஸ பூஜா ஸ்தோத்திரம் ஆகும். இது சங்கரரால் எழுதப்பட்ட நூலா என்ற சர்ச்சையும் உண்டு. ஆனால், இதன் கருத்தாழத்தை மனதில் கொண்டு பார்க்கையில், இதுவும் அந்த மகானின் நூலே என்று உறுதியாகச் சொல்லும் வகையில் அமைந்துள்ளது.*

*ஒரு சாமானிய ஜீவாத்மா, தன் குடும்பம், வீடு, தொழில், பிரச்சனைகள் என்ற குறுகிய வட்டத்தில் ஆழ்ந்து விடுகிறான். இறைவனைத் துதிக்க வேண்டும் என்ற அவா உள்ளத்தில் இருந்தாலும், அதை நிறைவேற்ற இயலாத நிலையில் அவன் அல்லல்படுகிறான். அதற்கு பகவத்பாதர் இந்த ஸ்தோத்திரத்தில் ஒரு சுலபமான வழி சொல்லுகிறார்.*

*இறைவா, உன்னை ரத்ன மயமான ஆசனத்தில் அமர்த்தி, கங்கை நீரால் அபிஷேகம் செய்து, சிறந்த ஆடைகளையும், நவரத்ன ஆபரணங்களையும் அணிவித்து, உன்னத சந்தனம்*

பூசி, நறுமணமிக்க புஷ்பங்களால் அலங்கரித்து தூப, தீப உபசாரங்களையெல்லாம் மனதினாலேயே செய்கிறேன், ஏற்றுக் கொள்.

ஸ்லோகம்

**ரத்னை: கல்பிதமாஸனம் ஹிமஜலை: ஸ்னானம் ச**
**தி$^{3}$வ்யாம்ப$^{3}$ரம்**
**நாநாரத்ன விபூ$^{4}$ஷிதம் ம்ருக$^{3}$மதா$^{3}$ மோதா$^{3}$ங்கிதம் சந்த$^{3}$னம்**
**ஜாதீ சம்பக பி$^{3}$ல்வ பத்ர ரசிதம் புஷ்பம் ச தூ$^{4}$பம் ததா$^{2}$**
**தீ$^{3}$பம் தே$^{3}$வ த$^{3}$யாநிதே$^{4}$ பசுபதே ஹ்ருத்கல்பிதம்**
**க்$^{3}$ருஹ்யதாம்**

இதில் கவனிக்கப்பட வேண்டிய வாக்கியம் ஹ்ருத்கல்பிதம் க்$^{3}$ருஹ்யதாம் என்பதே. இந்த பூஜை முறைகள் எல்லாம் என் மனதால் உணரப்பட்டது. இதை ஏற்றுக் கொள்ளுமாறு இறைவனுக்கு விண்ணப்பம். இதே போன்று மிகச் சிறந்த உணவையும் நிவேதனமாகப் படைக்கிறார் - மனதால் மட்டுமே (மனசா மயா விரசிதம் பக்த்யா ப்ரபோ ஸ்வீகுரு).

இந்த சுலபமான வழிபாட்டு முறை பக்தர்கள் உள்ளத்தில் பதிந்து விடுகிறது. மிகுந்த நேரமும், நியமமும், பொருளும் தேவையில்லை. எண்ணம் மட்டுமே சுத்தமாக இருந்தால் போதுமானது. இவ்வாறு அடித்தள பக்தனைத் தயார் செய்கிறார் ஆதிசங்கரர். அத்தோடு நிற்கவில்லை. சற்றே பக்குவப்பட்ட உள்ளத்தை அத்வைதத்தில் ஈர்ப்பதே அவர் நோக்கம். அதற்காக நான்காவது ஸ்லோகத்தில் ஒரு பெரிய தத்துவத்தை லகுவாக சொல்லி விடுகிறார். இதன் பொருளை முதலில் பார்ப்போம்.

சிவபெருமானே! நீயே ஆத்மா. பார்வதி தேவியே அறிவு நிலை. உற்றாரெல்லாம் பிராணன். சரீரமே வீடு. விஷய சுகங்களே உன் வழிபாடு. உறக்கமே சமாதி நிலை. நடக்கும் தடங்கள் எல்லாம் உனக்குச் செய்யும் பிரதக்ஷிண வழிபாடு. எல்லா வார்த்தைகளுமே உனக்கான

*தோத்திரங்கள். நான் எதை எதையெல்லாம் செய்கிறேனோ அவையாவும் உன் வழிபாடே.*

*மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், இதன் பொருள், ஒரு தாமச நிலையில் வாழும் மனிதனின் மனப்போக்காகத் தோன்றும். என்னால் உன்னை வழிபட இயலாது. அதனால் என் செயல்களையெல்லாம் நீ உன் வழிபாடாகக் கொள் என்ற அடிப்படையில் ஒரு முதிர்ச்சி அடையாத பிரார்த்தனையாகவே புலப்படும். இதுவே ஸ்தூல நிலையில் உள்ள சாதகனின் அடித்தளம். ஆனால் இதற்கு முன் மூன்று ஸ்லோகங்களில், அவன் மனத்தை பக்குவப்படுத்தியுள்ள சங்கரர். இப்பொழுது அத்தகைய மனநிலையில் சாதாரணனை, சாயுஜ்ய நிலைக்கு உயர்த்துகிறார். இந்த ஸ்லோகத்தின் முதல் வரி இதை உணர்த்துகிறது.*

***ஆத்மா த்வம் கிரிஜா மதி:***

*முதல் நிலையில் மனதால் வழிபட்ட சாதகன் ஒரு பக்குவப்பட்ட நிலையை எய்துகிறான். அவன் தன் ஆத்மா ஈஸ்வர ஸ்வரூபம், அறிவு அம்பாள் மயம் என்று உணர்ந்தவுடன், மிகப் பெரிய தத்துவ நிலையை எய்துகிறான். பூசலார் என்ற நாயன்மாரும் அபிராமி பட்டரும், ஸ்ரீராமானுஜரும் இந்த நிலையில் இருந்தே இறைவனைக் கண்டவர்கள். இந்த நிலையை எய்திய சாதகன், அன்பு வடிவமாக ஆகிறான். அவன் பேச்சு இறைவனைப் பற்றியதே, நடை ஆலயத்தை நோக்கி, விஷய போகங்கள் என்பது வழிபாடே, உறங்கும் போதும் துரீய நிலையில் அமைகிறான். கீதையில் கண்ணன்*

***மச்சித்தா மத்³க³தப்ராணா போ³த⁴யந்த: பரஸ்பரம்।***
***கத²யந்தஸ்ச மாம்நித்யம் துஷ்யந்தி சரமந்திச॥ 10-9॥***

*என்று சித்தத்தை சிவன் பால் வைத்த உள்ளப் பாங்கினை சுருக்கமாககத் தெரிவிக்கிறார். இந்நிலை வராத போது மனமும் வாக்கும் இறைவனை அடைய முடியாமல் திரும்புகின்றன என்கிறது உபநிஷதம்.*

***யதோ வாசா நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ***

இதை நாவுக்கரசர் கோமார்க்கே நாமென்றும் மீளா அடிமை, கொய்ம் மலர்சே அடியினையே குறுகினோமே என்று மெய் சிலிர்த்துக் கூறுகிறார்.

இதற்குக் கரும பலனும் துணை போகும். பொய்கை ஆழ்வார், கருவிலே திருவுடையவர். ஆழ்வார்களில் முதல்வர். அவர் எந்த நிலையிலும் தான் இறைவனை மறக்க இயலாது என்ற பெரு நிலையை விளக்குகிறார்.

**ஒன்றும் மறந்து அறியேன் ஓதநீர் வண்ணன் நான்**
**இன்று மறப்பனோ ஏழைகாள்? - அன்று**
**கரு-அரங்கத்துள் கிடந்து கை தொழுதேன்-கண்டேன்**
**திருவரங்கமே யான் திசை.**

சிசுவாகத் தாயின் கருப்பையில் கிடந்த நிலையிலேயே, இறைவனைத் தொழுத நான், இன்று கர்ம, ஞான, இந்திரியங்கள் படைத்த - முழு மனித வடிவில் இறைவனை மறக்க இயலுமா - இயலாது என்று தத்துவ நிலையைத் தலைக் கட்டுகிறார், ஆழ்வார்.

ஞான மார்க்கத்திற்கு, சங்கரர் காட்டிய மானசீக வழிபாடு ஒரு ஆரம்ப நிலை. இறைவழிபாட்டில் அன்பும், அதைச் செய்ய ஆர்வமும் இருந்தால் ஞானச் சுடர் நம்முள் மட்டுமின்றி உலகமெங்கும் பரவும் என்பதை பூதத்தாழ்வாரின் இப்பாசுரம் தெளிவாக்கும்.

**அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக**
**இன்பு உருகு சிந்தை இடு திரியா - நன்பு உருகி**
**ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன், நாரணற்கு**
**ஞானத் தமிழ் புரிந்த நான்.**

ஞானச் சுடர் உலகை உய்விக்கும் என்பதை தேர்தட்டில் இருந்த பார்த்தசாரதி சொல்கிறான்.

**ஞானதீபேன பாஸ்வதா**

இத்தகைய ஞானியே என் ஆத்மா என்பது இறைவனின் திருவுள்ளம். இந்த ஒளி பரவிய உள்ளம், எந்நேரமும் இறைவனையே சார்கிறது.

***பகல் கண்டேன் நாரணனைக் கண்டேன் கனவில்***
***மிகக் கண்டேன் மீண்டு அவனை, மெய்யே***
***மிக்க கண்டேன்***

நான்கு முறை கண்டேன் என்று சொல்லும் பக்தனின் உள்ளம் முழுவதும், இறைவனே உறைகிறான் என்பது நோக்கத் தக்கது. பகல், இரவு, கனவு, நினைவு என்ற வேறுபாடு இன்றி சித்தம் முழுவதும் இறைவனாகவே இருப்பதே, அத்வைதமாகப் பரிமளிக்கிறது.

நான் யார்? என்ற கேள்வியை பூர்வாசாரியர்கள் பலர் எழுப்பினர். இதற்குக் காரணம், தன்னை அறியாத நிலையில் மாந்தர்கள், துக்கச் சுமையில் ஆழ்ந்து போகின்றனர்.

த்வந்தம் என்ற இருமை நிலையே துன்பத்திற்குக் காரணம். யயாதி என்கிற மன்னன் ஒரு சாபத்தின் காரணமாக இளமையை இழந்து முதுமையை அடைகிறான். ஆனால் உள்ளத்தால் அவன் மனம் முதிர்ச்சி அடைவில்லை. சிற்றின்பங்கள் அவனைத் தங்கள் போக்கில் இழுத்தன. ஆனால் முதிர்ந்த உடல், இன்பத்தைத் துய்க்கத் துணைபோகவில்லை, தன் புதல்வர்களிடம் தன் முதுமையை ஏற்று அவர் தம் இளமையைத் தருமாறு வேண்டுகிறார். மூத்த புதல்வர்கள் மறுத்த அளவில், கடைசி மகன் தந்தையின் வேண்டுகோளுக்கு இணங்குகிறான். இளமையை மீண்டும் பெற்ற யயாதி முழு வீச்சுடன் இன்பங்களை நாடுகிறான். பல காலம் போன பின்பும் அவனுக்கு உள்ளத்தில் நிறைவு கிட்டவில்லை. இறுதியில் மகனுக்கு இளமையைத் திருப்பிக் கொடுக்கிறான்.

இதுவே மானுடத்தின் இன்றைய நிலை. இத்தகைய சம்சாரிகள் உய்யவே சங்கர பகவத் பாதர், மானசீக பூஜை என்ற வழியைக் காட்டி, அதன் மூலம் பேரின்பப் பேற்றைத் தந்து அருளுகிறார். இந்தப் பேறு பெற்றவர் நான் என்பது இந்த சரீரத்திற்கு அப்பாற்பட்ட ஒரு நிலை

என்பதை உணர்கின்றனர். இறைவன் சர்வ்ந்தர்யாமித்வம், சர்வ சரீரத்வம் என்ற நிலைகளில் உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளிடமும் உறைகிறார். 'நான்' என்ற எல்லையைக் கடந்த ஜீவன், உலகமெங்கும் இறைத்தன்மையையே காண்கிறது. ஸ்ரீருத்ரம் என்பது யஜுர் வேதத்தின் மையத்தில் அமைந்துள்ள ஹ்ருதய பாகம்.

இது உலகிலுள்ள எல்லா வடிவங்களிலும் - நல்லவர், தீயவர், கள்வர், மற்றும் அசேதன வஸ்துகள், ஏன் அற்பமான மண், புழுதி வடிவிலும் கூட ருத்ரனையே காண்கிறது.

இந்நிலையைத் திருநாவுக்கரசர் மிக அழகாகத் தன் பாசுரங்களில் வருணிக்கிறார். திருக்கயிலாய யாத்திரையை மேற்கொள்கிறார். வாகீசர், இறைவனால் தடுத்தாளப்பட்டு, திருவையாறில் உள்ள குளத்தில் கரையேறுகிறார். சற்றே ஏமாற்றத்துடன் ஐயாரப்பனைத் தரிசிக்கப் புகல்கிறார் அடிகளார். செல்லும் வழியெல்லாம் சோலைகள். பல விலங்கு மற்றும் பறவை இனங்கள் காணப்படுகின்றன. இறைவன்பால் உள்ளம் முழுதும் ஆட்பட்டநிலையில், அடியார்க்கு அனைத்துமே சிவ-பார்வதி வடிவமாகத் தோன்றுகிறது.

**யாதும் சுவடு படாமல் ஐயாறு அடைகின்றபோது**
**காதல் மடப் பிடியோடும் களிறு வருவனக் கண்டேன்**
**கண் டேனவர் திருப்பாதம் கண்டறியாதனக் கண்டேன்**

கண்டேன், கண்டேன் என்று நாவுக்கரசர் உளம் உருகிப் பாடுகிறார்.

இதுவே பேரின்ப நிலை. அகங்காரம் நீங்கிய நிலை. இதற்கு பகவத்பாதரின் உன்னத நெறியும் மற்றைய சான்றோர்களின் அனுபவங்களும் நமக்குச் சிறந்த பாதையை அமைத்துத் தருகின்றன. நான் என்னும் வலையை நீக்க அவை நமக்குத் துணை போகின்றன.

# ஈன்றிட்ட அன்னைக்கும் பெரிதருள் புரிந்தோய்

**ஆகுரா**

*பகவான் மதுரையை விட்டு நீங்கி அருணாசலம் சேர்ந்தபின் பிற்காலத்தில் ஓர் நாள், தன் மகன் பவழக்குன்றில் இருப்பதையறிந்து அன்னை அழகம்மை தன் மூத்த மகனுடன் அங்குச் சென்றாள். மிகுந்த சிரமத்துடன் படியேறி பவழக் குன்றினை அடைந்தாள். அங்கு ஒரு பாறையில் சிக்குபடிந்த முடியுடன் நீண்டு வளர்ந்த நகங்களுடன் அழுக்குக் கோவணத்துடன் வேங்கடராமன் வீற்றிருப்பினும் அவனை அடையாளம் கண்டு அவன் தன் மகனே என்று தாய்மை உணர்வால் சட்டென்று உணர்ந்தாள். அவனுடைய நிலையைக் கண்டு மிகவும் துணுக்குற்று கண்ணீர் பொங்க அவனைத் தன்னுடன் வரும்படி அழைத்தாள். அங்குத் தன் மகனை தான் காப்பதாகக் கூறி வேண்டினாள்.*

*இவ்வாறு சில நாட்கள் திருவண்ணாமலையில் தங்கியிருந்து தினமும் வந்து சுவாமியைத் தன்னுடன் வந்துவிடும்படி வேண்டினாள். தான் இத்துணை வேண்டியும் தான் பெற்ற மகன் பதில் ஏதும் உரைக்கவில்லையே என்று அரற்றிக் கண்ணீர் சொரிந்தாள். இவ்வன்னையின் துயரைத் தாங்கமுடியாமல் பச்சையப்ப பிள்ளை என்ற அன்பர், சுவாமி! உங்கள் அன்னை அழுது வேண்டுகின்றாள். ஆம், இல்லை என எதுவாக இருந்தாலும் தயவுசெய்து அவர்களுக்குப் பதில் கூறுங்கள்.*



*தங்கள் மௌன விரதத்தைக் கைவிட வேண்டாம். இதோ காகிதமும் பென்சிலும் இருக்கின்றன. தயவுசெய்து தாங்கள் கூறவிருப்பதை இதில் எழுதுங்கள் என்று வேண்டினார். அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க சுவாமி பேப்பரையும் பென்சிலையும் எடுத்துக்கொண்டு மௌனமாகக் காகிதத்தில் பின்வருமாறு எழுதினார்:*

*அவரவர் பிராரப்தப் பிரகாரம் அதற்கானவ னாங்காங்கிருந் தாட்டுவிப்பன். என்றும் நடவாத தென் முயற்சிக்கினு நடவாது; நடப்ப தென்றடை செய்யினு நில்லாது. இதுவே திண்ணம். ஆதலின் மௌனமாயிருக்கை நன்று.*

*மேற்கண்ட சில வரிகளில் வேதாந்தக் கருத்தை சுவாமி கூறிவிட்டார். விதியில் ஆமாம் இல்லை என்று ஒன்றுமில்லை. அனைத்தும் அவன் ஆணைப்படி நடக்கும். இதுவே முடிவு. இதில் அதிசயம் என்னவென்றால் அன்னைக்கு அருளிய உபதேசம் அனைவருக்கும் பொருந்தியிருந்தது. அதை அப்படியே கடைப்பிடித்தவர் பகவான்! மௌனமாக, சாட்சியாக நின்று விருப்பு வெறுப்பின்றி தான் செய்ய வேண்டியதைச் செய்தவர் பகவான்.*

***பால் நினைந்தூட்டுந் தாயினும் சாலப் பரிந்து நீ***
***பாவியேனுடைய***
***ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா***
***ஆனந்தமாய***
***தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த செல்வமே***
***சிவபெருமானே***
***யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்***
***தருளுவதினியே.***

***— மாணிக்கவாசகர்***

*அண்ணாமலையார் கருணையால் பகவானைத் தன்னிடத்தில் அழைத்துத் தன்னிடத்திலேயே தன்னிலையில் பகவானை நிறுத்திய கருணை ஈன்றெடுத்த தாயின் கருணையினும் மேலானதே. தாய் உடலை,*

*உள்ளத்தை வளர்க்கிறாள். அருணாசலன் உள்ளத்தை அறவே அறுத்து, தன்மயமாக்கி நிதம் ஆனந்தமயமாக இருக்கும் நிலையை அருளுகிறான். எனவே வேங்கடராமன் தாய் காப்பாற்றுவதாகக் கூறியபொழுதும் அசையவில்லை.*

**ஈன்றிடும் அன்னையிற் பெரிதருள் புரிவோய்**
**இதுவோ வுனதருள் அருணாசலா!**

*மீண்டும் 1914-ஆம் வருட ஆரம்பத்தில் தன்னுடைய குலதெய்வமான வேங்கடாசலபதியைத் தரிசிக்க திருப்பதிக்குச் சென்று திரும்பி வரும் வழியில் தன்னுடைய மகன் பிராம்மண சுவாமியுடன் விருபாட்சி குகையில் சில வாரங்கள் தங்கியிருந்தார். இச்சமயத்தில் டைபாய்டு காய்ச்சல் போன்று ஏதோ ஜுரத்தினால் பீடிக்கப்பட்டு இரண்டு மூன்று வாரங்கள் கடுமையாகத் துன்பப்பட்டார். பகவான் தனக்கு என்ன நோய் வந்தாலும் அதைப் பொருட்படுத்துவதில்லை. ஆனால் தன்னைக் காண வருபவர்களும் தன்னுடைய அன்பர்களும் துன்பப்பட்டால் அவர்களிடம் மிகவும் அன்பாகவும் ஆதரவுடனும் இருப்பார். தன்னுடைய அன்னையிடத்திலோ அவர் இருவிதமாகக் கடன் பட்டிருந்தார். ஒன்று மனித இனத்தைச் சார்ந்த தனிநபர் மீது காட்ட வேண்டிய கருணை, இரண்டாவது தன் அன்னையாக இருந்து சிறுவயதில் தன்மீது காண்பித்த அன்புக்கும் ஆதரவுக்கும் கைம்மாறு செய்ய வேண்டிய கடமை! இந்த இருவிதக் கடமை களுக்காகவும் அன்னையைப் பொறுமையாகவும் மிகவும் அக்கறையுடனும் கவனித்து வந்தார். ஜுரத்தின் வேகம் அதிகமாக அன்னையின் துன்பமும் தாங்க வொணாதபடி அதிகரித்தது. எனவே அண்ணாமலையார் மீது நான்கு வெண்பாக்களை இயற்றி அண்ணாமலையானைத் தன்னுடைய அன்னையை இத்துன்பத்திலிருந்து காத்தருளுமாறு வேண்டினார். அதில் மூன்றாவது பாடல்:*

**ஞானாங்கியாய் ஓங்கும் நல்லருணை ஓங்கலே**
**ஞானாங்கியால் அன்னை நல்லுடலை - ஞானாங்கம்**

***ஆகச்செய்து உன்பதத்தில் ஐக்கியமாக்கிக் கொள்வாய்***
***சாகத்தீ மூட்டுவதேன் சாற்று.***

*பகவான் விண்ணப்பத்தை அண்ணாமலையார் நிறைவேற்றாதிருப்பாரா? ஞானாங்கமாகச் செய்து உன்பதத்தில் ஐக்கியமாக்கிக் கொண்டு விட்டால், சாகத்தீ மூட்டுவதேன் சாற்று என்ற வரிகள் கவனத்திற்குரியது. தனது வாசனைகள் அனைத்தும் அழிந்து பிறவா நிலையை அன்னை அடைய வேண்டும். அதுவல்லாது இப்பொழுதே அவள் மாய்ந்துபோனால் அவள் தேகம் தீக்கிரையாகி மறுபிறவி எடுக்க நேரிடலாம். (பின்னால் பகவான் அன்னையை வாசனைகளை நீக்கி முக்தி அளித்தார் என்று நடக்கப் போவதை முன்கூட்டியே இப்பாடலில் கூறிவிட்டார் எனலாம்.)*

*1916ஆம் ஆண்டு தொடக்கத்தில் அன்னை அழகம்மை பகவானிடமே நிரந்தரமாக அடைக்கலம் வேண்டி திருவண்ணாமலைக்கு வந்தார். அப்பொழுது பகவான் விரூபாட்சி குகையில் அன்பர்களுடன் வாசம் செய்த காலம். பகவானின் தாய் அழகம்மாள், தான் பகவானுடன் தங்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள். பெண்கள் எவரும் அக்காலத்தில் இரவில் குகையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் தங்குவதற்கு அன்பர்களால் அனுமதிக்கப்படுவதில்லை.*

*அடியவர்களின் ஆட்சேபணைகளைக் கேட்ட எச்சம்மாளும், மற்ற பெண்மணிகளும், விரூபாட்சி குகையில் தங்குவதற்கு நாங்கள் என்றும் அனுமதி கேட்க மாட்டோம். அழகம்மாளை மட்டும் தங்க அனுமதித்தால் போதும்! அவளுக்கு மிகவும் வயதாகி விட்டது. ஒவ்வொரு நாளும் அவளால் மலைமீது ஏற முடியாது. இந்த முதிய வயதில் அவள் எங்கே போகமுடியும்? பகவான் மட்டும்தான் அவளை இனி பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறினர். அப்பொழுது பகவானது மனத்தில் என்ன இருக்கிறது என்று யாருக்கும் தெரியவில்லை. அதே சமயத்தில் விருபாட்ச*

குகையில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தவும் அவர்கள் விரும்பவில்லை. எனவே தொடர்ந்து அவர்கள் அழகம்மையாரின் வேண்டுகோளை நிராகரித்தனர். அப்பொழுது அழகம்மாள் மிகவும் துன்பத்துடன் திடீரென்று விருபாட்சி குகையை விட்டுச் செல்ல எழுந்தாள்.

அதைக் கண்ட பகவான் மிகவும் வருத்தப்பட்டு அவளுடைய கையைப் பிடித்துக்கொண்டு, "வாம்மா! நாம் போகலாம்! இங்கே இல்லாவிட்டால் வேறெங்காவது தங்கிக் கொள்ளலாம்" என்று கூறி அவளை அழைத்துச் செல்ல முற்பட, அங்கிருந்தோர் அனைவரும் பகவான் நிரந்தரமாகத் தங்களை விட்டுப் போய்விடுவாரோ என்று பயந்து அவருடைய காலில் விழுந்து, பகவானிடம், தயவுசெய்து எங்கேயும் போகவேண்டாம். அன்னையுடன் இங்கேயே தங்கி விடுங்கள் என்று மன்றாடினர். அன்றிலிருந்து அழகம்மை பகவானுடன் தங்குவதற்கு இருந்த தடை நீங்கியது.

கந்தாச்ரமத்திற்கு பகவான் வாசம் செய்த காலத்தில் அழகம்மை தனக்கும் தனது மகன்களுக்கும் அதாவது பகவான், நாகசுந்தரம் மற்றும் அங்குத் தங்கியிருந்த அன்பர்களுக்கும் சேர்த்து சமைக்கத் தொடங்கினார்.

ஆனாலும் அவளுடைய வாசனாதிகள் என்ற மற்ற தடைகள் இருந்தன. பகவானிடம் அவள் இது வேண்டும், அது வேண்டும் என்று கேட்டால், பகவான் மெதுவாக அவளைக் கடிந்து கொள்வார். அம்மா! உனக்கு தேக சௌகரியம் வேண்டுமென்றால் இன்னொரு மகனிடம் போய்விடு! மனச்சாந்தி வேண்டுமென்றால் இங்கே இருக்கலாம் என்று கூறுவதுண்டு. எப்படியோ ஆச்ரமத்திலுள்ள கடின வாழ்க்கைக்கு ஏற்றவாறு அவள் தன்னை மாற்றிக் கொண்டாள்.

பகவான் தனது அன்னையுடனும் தம்பியுடனும் சமையல் போன்றவைகளில் ஈடுபட்டிருந்தாலும் இவையெல்லாம் ஒரு காட்சி மட்டுமே. இவற்றினால்

எல்லாம் மகரிஷிக்கு எவ்வித பந்தமும் இல்லை. பகவான் தான் அனைவரையும் பரமாத்வாகக் கருதுவது போல் அழகம்மையையும் கருதினார். ஆனால் அழகம்மையோ பகவானைப் பரம்பொருளாகக் கருதுவதைக் காட்டிலும் தான் பெற்றெடுத்த செல்வமாகவே கண்டார். இந்த அஞ்ஞானத்தை நீக்க பகவான் அவருக்கு பூமிநாதராகவும் மற்றும் பல்வேறு வடிவங்களிலும் காட்சியளித்தார். பகவான் பரம்பொருள் என்று பிறர் கூறினும், சிறுகச் சிறுகத் தன் அனுபவத்தினாலும், தான் கண்ட காட்சிகளினாலும் தன் மகன் தனது பிறவித் தளையை நீக்க வந்த பிரான் என்று உணர்ந்தார்.

பகவான் படிப்படியாக அன்னையின் மனதை மாற்றி அவரைப் பக்குவப்படுத்தி வந்தார். பகவானின் உபதேசங்களால் அன்னையும் தன்னுடைய இறுதி பற்றுக்கோடாக பகவானைக் கருதி, இறந்தவுடன் என் உடலை முட்புதரில் தூக்கிப் போட்டாலும் பரவாயில்லை; ஆனால் என்னுடைய உயிரை உன் கைகளில்தான் விடவேண்டும் என்று வேண்டுவார்.

இவ்வாறு அன்னைக்கு பகவான் அறிவுரை கூறியும் அவர் உள்ளத்தில் அருட்சக்தியை செலுத்தியும் படிப்படியாக உலக வாழ்க்கை பந்தங்களிலிருந்து விடுவித்தும் சிறிது சிறிதாக அவர் மனம் சாந்தியடையச் செய்தார்.

தான் இறக்கப் போகின்றோம் என அழகம்மையாருக்கு முன்னரே தெரியுமா என்று பகவானை பக்தர் ஒருவர் கேட்டதற்கு, ஆமாம்! தங்கை அலமேலு புதிதாக வீடு கட்டி கிருகப்பிரவேசம் நிகழ்ச்சிக்கு அம்மாவை அழைத்தபோது என்னை விட்டு இனி எங்கும் போவதில்லை என்று கூறிவிட்டாள். மேலும் என்னை விட்டு எங்காவது சென்றால் அவள் உயிர் அங்கு எங்கேனும் பிரிந்து விடுமோ என்று அச்சப்பட்டாள். என் மடியிலேயே உயிர் விட வேண்டும் என்று ஆசை வைத்திருந்தாள்.

*1922ஆம் வருடம் மார்ச் மாத தொடக்கத்தில் அழகம்மையின் உடல்நிலை பலவீனமடைந்தது. படுத்த படுக்கையில் இருந்தார். பகவான் அன்று அன்னையின் அருகில் அமர்ந்து தனது வலது திருக்கரத்தினை அவள் இதயத்தின் மேல் வைத்து மற்றொரு திருக்கரத்தை அவளின் உச்சந்தலையில் வைத்தபடி இருந்தார். மாலையில் அவளுக்கு சிறிது மூச்சுத் திணறல் ஏற்பட்டது. ஆனால் பகவானின் வலது கரம் மார்பில் இருந்ததால் அம்மாவிற்குச் சற்று சாந்தி ஏற்பட்டது.*

*பகவான் அருகில் இருந்த குஞ்சு சுவாமி முதலியோர் அருணாசல அக்ஷரமணமாலையைப் பாராயணம் செய்தனர்.*

*அப்போது அவள் நிலையைப் பற்றி பகவான் கூறுகின்றார். கடந்த பல ஜென்மங்களின் ஆசைகளும் நினைவுகளும் வாசனையாக மேலும் மேலும் பொங்கி வந்தன. ஆனால் அவைகளெல்லாம் என் கைபட்டு உடனுக்குடன் அழிந்து விட்டன. அவள் அப்படியே சென்றிருந்தால் பல ஜென்மங்கள் எடுக்க வேண்டியிருந்திருக்கும். வாசனைகளெல்லாம் ஒழிந்து ஆழ்ந்த சாந்தி ஆட்கொண்டது. அவள் உயிர் இதயத்தில் ஒடுங்கியதன் அடையாளமாக ஒரு சிறிய அதிர்வு ஏற்பட்டது. இது மணியோசையைப் போன்று இருந்தது. ஆனால் நான் கையை எடுக்கவில்லை. முழுவதுமாக அவள் அடங்கிவிட்டாள் என்று தெரிந்த பிறகுதான் கையை எடுத்தேன். ஏனெனில் முன்னர் பழனிசுவாமியின் மூச்சடங்கும் நேரத்தில் அவர் மேல் வைத்திருந்த கையை எடுத்தவுடன் அவர் உயிர் கண் வழியாக வெளியேறி விட்டது. அதனால் அம்மாவின் பிராணன் இதயத்தில் முழுவதுமாக ஒடுங்கிவிட்டது என்று தெரிந்த பிறகுதான் என் கையை எடுத்தேன்.*

*பகுள நவமியன்று இரவு 8 மணிக்கு பகவானை ஈன்றெடுத்த புண்ணியவதியான அழகம்மையாரின்*

ஆன்மா இதயத்துடன் கலந்து விட்டது. சிறிது நேரம் பகவான் அமர்ந்து விட்டு மௌனமாக எழுந்தார்.

அம்மா முக்தியடைந்ததின் அடையாளமாக அவள் தேகம் தேஜசுடன் ஒளி விட்டது. முகத்தில் சொல்லொணா அமைதி நிலவியது. ஒரு யோகினி தியானத்தில் இருப்பதுபோல் அம்மா இருந்தாள்.

பகல் முழுவதும் மகரிஷியும் சில அன்பர்களும் உணவருந்தவில்லை. தன்னை ஈன்றாளுக்கு அனாயாசமாக முக்தி கொடுத்து அறையை விட்டு யாதும் நடவாததுபோல் வெளியே வந்த பகவான், அதுவரை உண்ணாமலிருந்த சில அன்பர்களை நோக்கி, தீட்டு ஒன்றும் இல்லை. வாருங்கள் சாப்பிடலாம் என்றார். அங்கிருந்த நாவல் மரத்தடியில் எல்லோரும் சாப்பிட அமர்ந்தார்கள்.

அன்பர்கள் அனைவரும் சாப்பிட்ட பிறகு யாவரும் ஒன்றுகூடி கலந்தாலோசித்தனர். பின்னர் சமாதி வைப்பது என்று முடிவானது.

அவ்வண்ணமே மலையின் தென்பாகத்தில் பாலிதீர்த்தக் கரையில் அன்னை அழகம்மையின் சமாதி வைபவம் திரளான பக்தர்கள் கூட்டத்திற்கிடையே சிறப்பாக நடந்தேறியது. அவ்விடமே இன்று மாத்ருபூதேச்வரர் ஆலயமாக விளங்குவதுடன் அதனைச் சுற்றியே ரமணாச்ரமம் வளர்ந்து வருகின்றது.

ஸ்ரீபகவானே அன்பர் ஒருவரிடம் பிற்காலத்தில் அன்னையின் சமாதி சாஸ்திர சம்மதந்தான் என்று கூறி, அதற்காக சூதசம்ஹிதை சுலோகத்தை மேற்கோள் காட்டியருளினார்.

சரீராதிகளிலும் விஷயங்களிலும் நான் எனதென்கிற அத்தியாஸம் நீங்கிப் பரிபூர்ண சுவாநுபூதி ஏற்பட்டிருக்குமேயானால், அந்த ஸ்திரீகளுக்காயினும் புருஷர்க்காயினும் வர்ணாசிரம தர்மங்களில்லை என்பது சித்தாந்தம்.

கணபதி முனியின் மனைவி விசாலாட்சி, பெண் ஞானிகளின் உடலை என்ன செய்வது என்று வினவியபோது பகவான், ஞானத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் பேதமில்லை. எனவே பெண் ஞானியின் உடலையும் சமாதி வைக்க வேண்டும் என்று கூறியதை ரமண கீதையிலிருந்து மேற்கோள் காட்டி, ஜீவன் முக்தர்களுக்கு ஆண் பெண் பேதமில்லை. ஜீவன் முக்தர்கள் உடல் இறைவன் உறையும் கோயில். எனவே அதை எரிக்கலாகாது. அம்மாவின் உடலுக்கு சமாதி வைப்பதுதான் முறையானது என்றார்.

பகவான் தனது அன்னை ஆரம்ப காலத்தில் தான் காப்பாற்றுவதாகக் கூறி அழைத்தபோது அசையாத பகவான், அன்னை பகவானே நீயே கதி என்று சரணடைந்தபோது அன்னையை ஏற்று அன்னைக்கு ஏற்ற இடமாகிய முக்தியையும் அளித்தார். அவளுக்கென கோயிலும் அன்பர்கள்மூலம் எழுப்பிவிட்டார்.

ஒருமுறை அன்னையைப் பற்றி பகவான் குறிப்பிட்டது, சூரிநாகம்மாவின் கடிதங்களிலிருந்து:

உன்னை விட்டு எங்கேயும் போகமாட்டேன் என்பாள். எங்கேயாவது போய், போகிற இடத்தில் பிராணனை விட்டு விடப் போகிறோமே என்று பயம். என் கைகளில்தான் உயிரைவிட வேண்டும் என்று அவளுக்கு அப்படியொரு தீர்மானம். அலமேலு புது வீடு கட்டிக் கொண்டு, ஒரு தரம் வந்து பார்த்துவிட்டுப் போ அம்மா. நீ அங்கே தங்க வேண்டாம். கால் வைத்தால் போதும் என்று எவ்வளவோ கெஞ்சினாள். அம்மா போகவேயில்லை. அங்கே வந்தால் ஏதேனும் வியாதி வந்தால் இங்கே கொண்டு வர ரயில் சரியாகக் கிடைக்காமல் போகலாம். அப்போது இந்தப் பிள்ளை கைகளில் போக முடியாமல் ஆயிடுமே என்பாள். இந்தத் தேகத்தை கள்ளிப் புதரில் விசிறியெறிந்தாலும் சரி, உன் கைகளில்தான் நான் கண் மூட வேண்டும்

என்பாள். இதைச் சொல்லும் போது பகவான் குரல் தழுதழுத்தது.

என் கண்களிலும் நீர் மல்கியது. அப்பேர்ப்பட்ட திடமான வைராக்யம் ஒவ்வொருத்தருக்கும் வரணும் என்றேன். பகவான் உம், உம் என்றார். என் சடலத்தைக் கள்ளிப்புதரில் தூக்கியெறிந்தாலும் சரி என்று அவர் சொன்னதற்காகத்தான் போலும், அந்தத் தாயின் சமாதி மேல் இப்பொழுது ராஜா, மகாராஜாக்கள் உட்பட எல்லோரும் பூஜிக்கத் தகுந்த ஆலயம் அமைந்திருக்கின்றது!

அன்னை முக்தி அடைந்த வைகாசி பகுள நவமி நன்னாளை பகவான் அன்பர்கள் அனைவரும் வெறும் பூஜையாக அன்றி மகாபூஜையாக இன்றும் கொண்டாடி வருகின்றார்கள்.

பகவான் தன்னை அணுகிய எவரையும் கைவிட்டதில்லை. அவர் யாரைக் கைவிட்டார், தன் அன்னையை மட்டும் கைவிட! ஒருமுறை குஞ்சு சுவாமிகள் கோபித்துக் கொண்டு ஆச்ரமத்தைவிட்டு திருப்பதிக்கு புறப்பட எத்தனித்த போது, பகவான் அவரைத் தன்னுடன் கிரிப்பிரதக்ஷிணத்திற்கு அழைத்துச் சென்று அவர் செல்ல வேண்டிய புகை வண்டியில் செல்ல விடாமல் வேண்டுமென்றே காலதாமதப் படுத்தினார். அதன்மூலம் குஞ்சு சுவாமிகள் செல்வது தடைபட்டது.

அப்போது பகவான் கூறியதை குஞ்சுசுவாமி இவ்வாறு நினைவுகூர்வார்: “நான் கோபித்துக் கொண்டேனாம், இவன் திருப்பதிக்குப் புறப்பட்டானாம், மஹா புத்திசாலி! இவன் இங்கு ஆச்ரமச் சாப்பாட்டையே பிடிக்காமல் சாப்பிடுவான். குழம்பிலும், ரசத்திலும் தண்ணீரை விட்டுக் கொண்டு மருந்துபோல் விழுங்குவான். வெளியில் போனால் என்ன கிடைக்கும்? எப்படிச் சாப்பிடுவான்? அதல்லாமல் இவன் பூர்வாச்ரம குரு மலையாள ஸ்வாமி இவன் கையைப் பிடித்து என்னிடம் கொடுத்து, இவனைக் கைவிடாமல் காப்பாற்ற வேண்டுமென ஒப்படைத்து

விட்டுப் போனார். நாளை அவர் வந்து என் சிஷ்யன் எங்கே என்று கேட்டால் நானல்லவா பதில் சொல்ல வேண்டும்? இவன் என்னவென்றால் திருப்பதி போகிறானாம் திருப்பதி!" எனச் சிரித்துக் கொண்டே சொன்னதும் எனக்குச் சமாதானமும் சந்தோஷமும் ஏற்பட்டது.

இவ்வாறாகத் தன்னை அணுகிய மனிதர்களை மட்டுமன்றி பசு லட்சுமி, வள்ளி மான், ஜாக்கி எனும் நாய், பறவைகளில் காக்கை என அனைத்துயிர்களையும் பகவான் பட்சபாதம் சற்றும் பாராட்டாது உய்வித்து அருளியுள்ளார்.

**ஈன்றிடும் அன்னையின் பெரிதருள் புரிவோன் அருணாசலன்!**

**ஈன்றிட்ட அன்னைக்கும் பெரிதருள் புரிந்தோன் ரமணாசலன்!**

SRIRAMANASRAMAM FACEBOOK

ஸ்ரீ ரமணாச்ரம நிகழ்வுகள் மற்றும் ரமண மையங்களின் நிகழ்வுகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள கீழ்க்கண்ட face book முகவரியை பயன்படுத்தவும்:

http://www.facebook.com/SriRamanasramam

**ரமணோதயம் மின்னிதழ்**

ரமணோதய மின்னிதழை கீழ்க்கண்ட இணைய முகவரியில் காணலாம்.

http://ramanodayam.ashrama.org

# நூல் அறிமுகம்

## நிகரில்லா நிவேதிதா

### யதீஸ்வரி கிருஷ்ணப் பிரியா

***ராஷ்ட்ர சேவா சமிதி***

***புன்மைத் தாதச சுருளுக்கு நெருப்பாக***
***நின்ற தாய் நிவேதிதையத் தொழுது நிற்பாம்***

*என்று பாரதியால் வணங்கப்பட்ட ஆன்மிகக் கனல், சகோதரி நிவேதிதை. அயர்லாந்து நாட்டைச் சார்ந்த மார்க்ரட் எலிஸபெத் நோபில் ஸ்வாமி விவேகாநந்தரைச் சந்தித்த மாத்திரத்திலேயே அவர் அருட்சக்தியால் ஈர்க்கப்பட்டு, அவருடனேயே இந்தியாவிற்கு, அவரது சிஷ்யையாக வந்து, ஸ்ரீ ராமகிருஷ்ண இயக்கத்தில் ஒப்பற்ற பணி புரிந்தார். நோபிள் என்று பெயரில் மட்டுமல்லாமல் உண்மையிலேயே ஒரு Noble Life — உயரிய வாழ்வு வாழ்ந்து, தனது உடல்-ஆவி அனைத்தையுமே பாரதத் தாய்க்கு அர்ப்பணித்த ஆன்மிகத் தாயின் சரித்திரத்தை ராஷ்டிர சேவா சமிதி இந்நூலில் அழகுறக் கொணர்ந்துள்ளது. பாரத வரலாறில் இதுவரை காணாத ஆன்மிகத் தேசியம் என்ற கொள்கையை ஸ்வாமி விவேகானந்தர் விதைக்க, அதைப் பயிராக்கி வளர்த்தவர் சகோதரியார். தேசபக்தியைத் தெய்வ பக்திக்கு நிகராக்கி, பாரதம் உயரத் தன்னலமின்றி முனைப்புடன் பணியாற்ற*

வேண்டும் என்று இளைய சமுதாயத்திற்கு அவர் விடுத்த அறைகூவல் இச்சீரிய நூல் முழுவதிலும் எதிரொலிக்கிறது. ஸ்வாமி விவேகானந்தரின் வழிகாட்டலின்படி உயரிய துறவு நிலைக்கான பக்குவநிலை எய்த அவர் கைக்கொண்ட உயரிய ஆன்மிக சாதனைகளை இந்நூலில் காண்கிறோம். அதே சமயம் ஸ்வாமிஜியின் தேச பக்தியால் உந்தப் பெற்று, பாரதத் தாயின் முதன்மை சேவகியாகி, தேசிய சிந்தனையைத் தட்டி எழுப்பி, இளைஞர் மனதில் புரட்சிக் கனலை வளர்த்து, அவர்களை ஓர் ஆன்மிக-தேச நிர்மாண சக்தியாக உயர்த்த அவர் அரும்பாடுபட்டார். தேச விடுதலை சார்ந்த தம் சொல்லும், செயலும் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் என்ற ஆன்மிக அமைப்பை எவ்விதத்திலும் பாதித்துவிடக் கூடாது என்று எண்ணி, ஸ்வாமி பிரம்மாநந்தரின் அறிவுரைக்கிணங்க தனது ஆசான் தோற்றுவித்த மிஷனிலிருந்து தேச சேவைக்காகத் தம்மை முற்றிலும் விடுவித்துக் கொண்டார். தியாகம் அனைத்திலும், இது மிக உயரிய தியாகம். பாரதம் முற்றிலும் சுற்றுவது, அரசியல், விஞ்ஞானம், சமயம், நிலை, இலக்கியம் என்று எல்லாத் துறையிலும் பாரதத்தின் சிறப்பை மக்களுக்கு எடுத்துக் கூறி, புத்துணர்வை ஊட்டிய வரலாற்றை யதீஸ்வரி இந்நூலில் தெளிவுறக் கூறுகிறார். பாரதத்தின் வரலாற்றை இழிவு படுத்திய அந்நியருக்கும், இந்நாட்டிலேயே பிறந்த அடிமைப் புத்தி கொண்டவருக்கும்

**முன்னை நாடு திகழ்ந்த பெருமையும்**
**மூண்டிருக்கும் இந்நாளின் இகழ்ச்சியும்**
**பின்னர் நாடு பெற்றியும் தேர்கிலார்**
**பேடிக் கல்வி பயின்று உழல் பித்தர்கள்**

என்று இடித்துரைக்கிறார். பாரதப் பண்பறியாதாராய் விமர்சிக்கப்படும் இந்திய விதவை வாழ்க்கையை உயரிய துறவு வாழ்க்கை என்று வெளிச்சமிட்டுக் காட்டுவதையும் இந்நூல் விளக்குகிறது. இந்து சமயத்தில் விமர்சனத்துக்கு

உட்படும் விக்ரஹ ஆராதனை, சடங்குகள் அனைத்திலும் அடங்கியுள்ள ஆழ்ந்த உட்பொருள் அழகுற நிவேதிதையின் வார்த்தைகளிலேயே தெளிவுற விளக்குகிறார். ஹிந்து தர்மம் என்பது பாரத தர்மமே என்று ஆணித்தரமாக கூறும் நிவேதிதையாரின் அறை கூவல் இப்போதும் உறங்கிக் கிடக்கும் பாரத சமுதாயத்தை தட்டி எழுப்பும்.

கல்வி மற்றும் சமயப் பிரசாரம் மட்டுமின்றி, மக்கள் சேவையே மஹேசன் சேவை என்று தீவிரமாக நம்பிய நிவேதிதையார், வட பாரதத்தில் ப்ளேக் நோய் தீவிரமாக பரவியபோது, தமது உடல்-உயிர்க்கு நேரக்கூடிய பேரபாயத்தைப் பொருட்படுத்தாது, நிவாரணப் பணியில் தீவிரமாக ஈடுபட்டதையும், பின்னர் தீவிர பஞ்சம் நிலவிய போது தமது கையில் ஒரு காசும் இல்லாத போதும்கூட ஓய்வின்றிப் பணியாற்றியதையும் இந்நூல் உள்ளம் உருக விவரிக்கின்றது. இவர் செயல்பட்ட விதம் பேரிடர் மேலாண்மை (Disaster Management) எப்படி நடத்தப்பட வேண்டும் என்பதற்கு உதவியாக இருந்தது. கல்வித் துறையிலும் மெக்காலேயின் அடிமைக் கல்விக்கு மாற்றாக சகோதரியார் எடுத்துக்காட்டிய தேசியக் கல்விமுறையின் சீர்மையை யதீஸ்வரியார் அழகுறக் கூறுவதைக் காண்கிறோம்.

இன்றைய பாரதம் தனது சுய சங்கிலிப் பிணைப்பினின்றி விடுபட்டு தன்மானத்தோடும், நம்பிக்கயுடனும் தலை நிமிர்ந்து நிற்க ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய நூல் இது.

# ரமணத்தழகு

## கருணா (எ) நமச்சிவாயம்

*அழகு அழகு அழகு - ரமணர்*
*அழகுத் தாய்தந்த அழகு*
*பழகு பழகு பழகு - பகவான்*
*நாமம் நாவினில் பழகு*

*ரமணர் பெயரைக் கூறுகின்ற நாவழகு*
*ரமணர் பெயரில் சேருகின்ற பாவழகு*
*ரமணர் வாழ்வைப் படிக்கின்ற விழியழகு*
*ரமணர் வழியை வடிக்கின்ற மொழியழகு*

*ரமணர் பாதம் பணிகின்ற மனமழகு*
*ரமணர் பணிக்குப் பயனாகும் பணமழகு*
*ரமணர் நிலத்தில் உயர்கின்ற மரமழகு*
*ரமணர் தளத்தில் உழைக்கின்ற கரமழகு*

*ரமணர் கண்களில் வெட்டும் அருளழகு*
*ரமணர் காணிக்கை கொட்டும் பொருளழகு*
*ரமணர் கோவிலில் அதிரும் மணியழகு*
*ரமணர் கொல்லையில் உதிரும் கனியழகு*

*ரமணர் குளத்தில் ஊறுகின்ற நீரழகு*
*ரமணர் உளத்தில் உறுவதெலாம் பேரழகு*
*ரமணர் பூசையில் சேரும் மலரழகு*
*ரமணர் ஆசையில் கூறும் மலையழகு*

*ரமணர் பருகப் பால்தரும் மாடழகு*
*ரமணர் படரத் தோள்தரும் வீடழகு*
*ரமணர் பாதம் பட்டயிடம் நிலமழகு*
*ரமணர் பார்வை பட்டயிடம் வளமழகு*

*ரமணர் ஆலயக் கலையகல் ஒளியழகு*
*ரமணர் ஆலங் கிளையமர் கிளியழகு*
*ரமணர் தோட்டத்தில் வேர்விட்ட புல்லழகு*
*ரமணர் கூட்டத்தில் சேர்ந்திட்டால் உள்ளழகு*
*... மனத்துள்ளழகு*
*... நம்மனத்துள்ளழகு*




திருவண்ணாமலை

அன்னை அழகம்மையின் மகாபூஜை 13/6/2012 அன்று ஸ்ரீரமணாச்ரமத்தில் எப்பொழுதும் போல் சிறப்பான முறையில் நடைபெற்றது.

சென்னை ரமண கேந்திரம், குரோம்பேட்டை ரமண மையம், இராமநாதபுரம் முருகனார் மந்திரம் மற்றும் மதுரை ரமண கேந்திரம் ஆகிய இடங்களிலும் இவ்விழா கொண்டாடப்பட்டது. குரோம்பேட்டை ரமண மையத்தில் மயிலை கபாலீஸ்வரர் கோயில் ஓதுவார் சத்குருநாதன் அவர்கள் ரமண சந்நிதிமுறை பண்முறையில் பாடினார்.

இராமநாதபுரம்

26/5/2012 அன்று பழனி ரமண மந்திரத்திலிருந்து திரு. சோமசுந்தரம் அவர்கள் பழனி ரமண அன்பர்களுடன் இராமநாதபுரம் முருகனார் மந்திரத்திற்கு வந்திருந்தார்கள். அதுசமயம் உள்ளூர் ரமண அன்பர்கள் சத்சங்கம் கூடி சிறப்பு சொற்பொழிவு மற்றும் பாராயணம் நடைபெற்றன.



முருகனார் மந்திரம், இராமநாதபுரம்

## ரமண கேந்திரம், சென்னை

*சென்னை ரமண கேந்திரம் சார்பாக, கடந்த 16 ஆண்டுகளாக கல்வி உதவித்தொகையாக ஏழை மாணவ மாணவிகளுக்கு அளிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாண்டு 17/6/2012 அன்று 31 ஏழை மாணவ மாணவிகளுக்கு தலா ரூபாய் ஆயிரம் வீதம் வழங்கப்பட்டது. இவ்விழாவின்போது அக்ஷரமணமாலை கூட்டுப் பாராயணத்திற்குப்பின் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.*



ரமண கேந்திரம், சென்னை

## ரமணோதயம் காப்பு நிதி
## தொடரும் நன்கொடையாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| திருமதி | | இந்திரா வெங்கட சுப்ரமணியன், ஆழ்வார்பேட்டை, சென்னை-18 | 500 |
| திரு | V. | ரங்காச்சாரி கிரேஸி மோகன், சென்னை-28 | 1000 |
| திரு | S.B | ராமன், சென்னை-35 | 5000 |
| திரு | | பூவராகவன், சென்னை-45 | 1000 |
| செல்வி | K. | பாலகுசாம்பாள், சென்னை-92 | 1001 |
| திரு | L. | வெங்கடேசன், சென்னை-20 | 2500 |
| திரு | R. | கைலாசம், சென்னை-44 | 500 |
| | | நான் என்னும் சொற்பொருள் நாடி நிற்கும் நல்லோர் | 100000 |


ரமணோதயம்

Voluntary Services

| | |
|---|---|
| K. சுரேஷ் ஜானகிராமன் | 9444127770 |
| ராஜேஷ் M.S. | 9840075778 |
| வஸந்தா ராகவன் | 9445432335 |

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| ***மைலாப்பூர்*** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| ***சூளைமேடு*** திரு V. ரமணன் | .......... | 23612731 |
| ***கிழக்கு தாம்பரம்*** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| ***நங்கநல்லூர்*** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| ***கூடுவாஞ்சேரி*** திரு R. மாதவன் | .......... | 9940453553 |
| ***மாம்பலம்*** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| ***பெசன்ட் நகர், அடையார்*** திரு P. பாலசுப்பிரமணியன் | .......... | 24915881 |
| ***விருகம்பாக்கம்*** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| ***குரோம்பேட்டை***, ரமணாலயம் | .......... | 9444261296 |
| ***கொளத்தூர்*** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| ***அண்ணாநகர்*** U.V. பானு | .......... | 26287809 |
| ***புதுச்சேரி*** ரமண கேந்திரம் | .......... | 0413-2272141 |
| ***மதுரை*** சோமசுந்தரம் | ......... | 04522348157/2346102 |
| ***இராமநாதபுரம்*** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| ***திருச்சுழி*** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| ***பொள்ளாச்சி*** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| ***ஒட்டன்சத்திரம்*** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| ***பழனி*** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| ***சேலம்*** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| ***வந்தவாசி*** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| ***மடம்*** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



மாத்ருபூதேச்வரர் சந்நிதி



Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

